Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 18 புதன்கிழமை (03.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 308

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து



நன்றி இருக்க வேண்டும் 05



ஆட்ட நாயகனாக 06



கருத்துக் கூற மறுப்பு 03



தலை மறைவு 12

# பொறியியல் பீடத்துக்கு நிதி ஒதுக்கீடு பெற முயற்சி

## பல்கலைக்கழகத்தினர் அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களைக் கிளிநொச்சியில் நிறுவுவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுத்தரும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் கோரிக்கை முன்வைக் கப்பட்டிருக்கிறது.

மேற்படி இரு கற்கை பீடங்களையும் கிளிநொச்சியில் நிறுவுவதற்கு சுமார் 2300 மில்லியன் ரூபா நிதி தேவையாக உள்ளதாக உத்தேச மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவேண்டியுள்ளது.

இதன் முதற்கட்டமாக இந்த நிதி ஒதுக்கீட்டைக் கோரும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்கவேண்டும். அதன்பின்னர் அக்கோரிக்கை தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்து அங்கீகாரத்தை வழங்கும்.

இவ்வாறான படிமுறைகளினூடாகவே மேற்படி இரு கற்கை



பீடங்களுக்குமான நிதி ஒதுக்கீட்டைப் பெறமுடியும். எனவே இந்த விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி நிதி ஒதுக்கீட்டுக்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக சமூகம் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றைய தினம் யாழ். யூரோவில் நிறுவனத்தின் மகாநாட்டு மண்டபத்தில் வடமாகாண (15 ஆம் பக்கம் பார்க்க)

# செய்தித் தாள்களில் யுத்தம் செய்ய வேண்டாம்

## கூட்டமைப்புக்கு பதிலடி



(கொழும்பு)

நாடாளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டமைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்தித் தாள்களில் யுத்தம் செய்து வருகின்றனர்.. அவர்கள் இந்த முயற்சியைக் கைவிட்டு என்னுடன் தொடர்பு கொண்டால் போதிய விளக்கத்தைக் கொடுக்க முடியும் என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தமது அதிகாரத்துக்கு அப்பால் சென்று தாம் எந்த ஒரு (15 ஆம் பக்கம் பார்க்க)

# அங்கவீனமான குடும்பங்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கத் திட்டம்

(கொழும்பு)

அங்கவீனமுற்றோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

அதற்காக 419 மில்லியன் ரூபா அமைச்சிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனவரி மாதத்தில் இருந்து நிலுவைக் கொடுப்பனவுகளுடன் அந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா குறிப்பிட்டார்.

இந்த செயற்திட்டம் குறித்து அனைத்து பிரதேச செயலகங்களிலும் உள்ள அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பகுப்பாய்வு அறிக்கை பளபளப்பான புதிய முயற்சி

## என்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள "மனிதாபிமான நடவடிக்கையின் உண்மைப் பகுப்பாய்வு" என்ற பெயரிலான புதிய அறிக்கையை விமர்சித்துள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இது யுத்தத்தில் குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை என உலகை நம்பச் செய்வதற்கான ஒரு முயற்சி எனக் கூறியுள்ளது.

"யுத்தத்தின் கடைசி மாதங்களில் பொதுமக்கள் உயிரிழந்ததை இலங்கை அரசாங்கம் இறுதியாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், திருப்தியளிக்காத வகையில், அதற்கு பொறுப்பேற்கவில்லை" என நியூயோர்க்கைத் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வீதி விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். பழைய பூங்கா வீதியில் நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளால் மோதுண்டு வயோதிபர் ஒருவர் பலியானார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் குருசோ லேன், சுண்டிக்குளியைச் சேர்ந்த முத்தன் நடேசன் (வயது 87) என்ற வயோதிபரே பலியானார். இச்சம்பவத்தில் குறித்த வயோதிபரை மோதியவர் (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

## கொட்டடியில் நடந்த சோகம்

(யாழ்ப்பாணம்)

அண்ணனுடன் பட்டம் விடச் சென்ற தம்பி கிணற்றில் வீழ்ந்து பரிதாபரமாக இறந்த சம்பவம் ஒன்று நேற்று முற்பகல் யாழ். கொட்டடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த க.டிலக்சன் (வயது 05) என்ற சிறுவனே இவ்வாறு இறந்துள்ளார்.

நேற்று முற்பகல் குறித்த பகுதியில் பட்டம் விடுவதற்காக சகோதரர்கள் இருவரும் சென்றிருக்கின்றனர். அண்ணன் பட்டம் விடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது திடீரென தம்பியைக் காணாததையடுத்து அவர் (15 ஆம் பக்கம் பார்க்க)

# இந்துக் கல்லூரியில் இந்தியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

'ஹாமனி அன் றிதம்' என்ற தொனிப்பொருளில் தற்கால இந்திய ஓவியர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளது.


நாளை 11.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் ஆரம்பிக்கப்படும் இந் நிகழ்வு 6 ஆம் திகதிவரை இடம்பெறும்.

இதனை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகம், இந்திய கலாச்சார நிலையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியாவின் நான்கு முன்னணி பெண் ஓவியர்களினால் இந்திய இசை, இந்திய பெண்கள் மற்றும் இயற்கையின் பல்வேறு தன்மைகளை வர்ணம், ஒலி, வடிவமைப்பு மற்றும் மனித செயற்பாடுகளின் ஊடாக கலைப்படைப்புக்களை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சி கொழும்பு மற்றும் பதுளையில் இடம்பெற்றது. அடுத்து கண்டியிலும் இடம்பெறவுள்ளது.

# செல்வம், சுரேஷின் வெவ்வேறு முகங்கள்; கூட்டமைப்பின் குழறுபடியா? ராஜதந்திரமா?




(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் நாடாளுமன்ற சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை நாடாளுமன்றக் குழு இந்தியாவிற்கான பயணத்தினை மேற்கொண்ட போது இந்திய நாடாளுமன்றில் அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, இந்தியா சென்ற இலங்கை நாடாளுமன்றக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதனும் இடம்பெற்றிருந்தமை தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியினைத் தோற்றுவித்திருக்கின்றது என்று இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றக் குழுவிற்கு இந்திய நாடாளுமன்றம் வரவேற்பு வழங்கினால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களால் எதிர்ப்புத் தெரிவிக்



கப்படும் என்று அ.தி.மு.கவினர் அறிவிப்பு விடுத்திருந்த நிலையில் இலங்கை நாடாளுமன்றக் குழு இந்தியா சென்றிருந்தது. இந்தக் குழுவில் செல்வம் அடைக்கலநாதன் இடம்பெற்றிருந்ததன் பின்னணி என்ன என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகளவு மின்சாரம் பாவிப்போருக்கு மேலதிக கட்டணம் எதுவும் இல்லை

(யாழ்ப்பாணம்)

அதிகளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு மேல திகக் கட்டணங்கள் எவையும் அறவிடும் திட்டம் அரசுக்கு இல்லை என்று மின்சாரத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

மாதாந்தம் 120அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு மேலதிக கட்டணம் எதுவும் தற்போது அறவிடப்படுவதில்லை என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

120 அலகுகளுக்கு அதிக மான மின்சாரத்தை பயன்படுத்து வோருக்கு மேலதிக கட்டணங் கள் எவையும் அறவிடப்படுவ தில்லை என்று எரிபொருள் மின் சாரத்துறை அமைச்சு தெரி வித்துள்ளது

2010 ஆம் ஆண்டில் அவர் கள் குறித்த அலகுகளுக்காக செலுத்திய கட்டணங்களையே தற்போதும் செலுத்தவேண்டும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தநிலையில் மின்சார கட்ட ணங்கள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தொலைபேசி இலக் கங்களில் நுகர்வோர் தமது முறைப் பாடுகளை மேற்கொள்ளலாம்.

0112392607 என்ற தொலை பேசி இலக்கங்களில் பொதுமக் கள் தமது முறைப்பாடுகளை மேற் கொள்ளமுடியும் என்று மின்சாரத் துறை அமைச்சு அறிவித்துள்ளது

## அலங்கார உற்சவம்

ஏழாலை மாதிரி அருள்மிகு ஞான வைரவர் ஆலய கரவருட அலங்கார உற்சவப் பெருவிழா ஆடி 16 ஆவது நாள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆரம் பமாகி எதிர்வரும் (14.08.2011) வரை பதினான்கு தினங்கள் நடை பெறவுள்ளது. ஆடி 27 ஆவது நாள் வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழா மறுநாள் தீர்த்தோற் சவ மும் இடம்பெறவுள்ளது. (60)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

10 கிலோ கொள்ளவுடைய கிறைண்டர் விற்பனைக்குண்டு. 217/3, விஜயகுமார், கடைச்சாமி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். R/08


## நூல் வெளியீடு

எதிர்வரும் ஞாயிறு பிப.2.30 மணி யளவில் யாழ்.பலநோக்குக் கூட்டு றவுச் சங்க மண்டபத்தில் யோகரட் ணம் எழுதிய "தீண்டாமை கொடுமை களும் தீ மூண்ட நாளும்" என்ற நூலின் வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது

## வதிவிடப் பயிற்சி

இந்து சமய விவகார அலுவல் கள் அமைச்சின் அனுசரணையுடன் இந்து சமய விவகார திணைக்க ளம் ஏற்பாடு செய்திருந்த நாடளா விய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இந்து குருமார்களுக்கான வதிவிடச் செயலமர்வு நேற்று மட்டக்களப்பு நாவற்குடா இந்துகலாசார மண்டபத் தில் நிறைவுபெற்றது.

இச் செயலமர்வில் இந்தியா விலிருந்து வருகை தந்த பிரபல இந்து சமய அறிஞர்கள் விரிவுரை களை நடாத்தினர். இறுதி நாளான நேற்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வ ரன் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன் உட்பட பலர் அதிதிகளாக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.



நோன்பாளி ஒருவர் நமது இல்லம் நாடி வந்துவிட்டால் வயிறு நிரம்ப உணவு கொடுக்க முடியாவிட்டால் ஒரு பேரீச்சம்பழம், தண்ணீர் அல்லது பால் கொடுத்து நோன்பு திறக்க உதவினாலும் அல்லாஹ்வின் அருள் கிடைக்குமென ரஸூல் (ஸல்) கூறியுள்ளார். (105)

## நுண்கலை ஆசிரியர்களுடன் ஆளுநர் விசேட சந்திப்பு

கடந்த வியாழக்கிழமை அலரிமாளிகையில் ஆசிரிய நியமனக் கடிதம் வழங்கப்பட்ட வடமாகாணத்தைச் சேர்ந்த நுண்கலைப் பட்ட தாரிகளை வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் எதிர்வரும் 05.08.2011 அன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் சந்திக்கவிருப்பதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை நியமனக் கடிதம் மற்றும் கடமையேற்ற கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தவறாது சமூகமளிக் கும்படி வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. மேலும் இக் கலந்துரையாடலில் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.



மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை நேற்று கண்ணாதிட்டி மக்கள் வங்கிக்கிளையில் ஊழியர்கள் இரத்ததானம் வழங்கினர்.

## வெற்றியடைந்தது யூனியன் அணி

யாழ்.உதைப் பந்தாட்ட லீக்கி னால் நடாத்தப்படும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டியில் பாசை யூர் சென் அன்ரனிஸ் அணியை ஆனைக் கோட்டை யூனியன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டியது.

உரும்பிராய் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 11 பேர் கொண்ட விலகல் முறையி லான இச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுகின்றன. யூனியன் அணி பங்குபற்றிய முதலாவது போட்டியில் வெற்றியை ஈட்டியுள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதியில் வீடு ஒன்றில் மோட்டார் சைக்கிள் திருடுவ தற்காகச் சென்ற இளைஞர் ஒருவரைக் குறித்த வீட்டார் அயலவரின் உதவியுடன் மடக்கிப் பிடித்து தர்ம அடி கொடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று அதிகாலை சங்கானைப் பகுதியில் நடைபெற்ற இச் சம்ப வத்தில் படுகாயமடைந்த குறித்த இளைஞர் நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென பொலிஸா ரினால் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் குறித்த இளைஞர் அவரது நண்பர்களுடனேயே இத்திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகவும் முயற்சி பயனளிக்காததை அடுத்து குறித்த இளைஞனின் நண்பர்கள் அவரை விட்டு விட்டு ஓடிவிட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது. பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் குறித்த இளைஞரிடம் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (பா.எஸ்)

## சுத்தமற்ற பணிஸ் விற்பனை வர்த்தகருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் உள்ள கடையொன்றில் விற்பனை செய் யப்பட்ட பணிசிற்குள் இறந்த பல்லி யொன்று இருந்தமை யாழ்.மா நகர சுகாதாரப் பரிசோதகர் களினால் கண்டுபிடிக்கப்பட்டு அக்கடை உரிமையாளருக்கெதி ராக யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கொன்று தாக் கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கினை நேற்று விசார ணைக்கெடுத்துக்கொண்ட யாழ். நீதிமன்றம் குற்றவாளிக்கு 3000 ரூபா தண்டம் விதித்ததுடன் தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண் டனை அனுபவிக்க வேண்டுமென தீர்ப்பளித்தது.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிபதி ஏ.ஆனந்தரார்சாவே மேற்படி குற்றவாளிக்கு இந்த தீர்ப்பை வழங்கினார். (பா)

## சேவை நலன் பாராட்டு விழா

(அம்பலப்பெருமாள்)

ஓய்வுபெற்றுச் செல்லவிருக் கும் துணுக்காய் வலயப் பிர திக் கல்விப் பணிப்பாளர் த.இரா யேஸ்வரனுக்கு மல்லாவி மத் திய கல்லூரியில் நேற்று பிற்ப கல் சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

கல்லூரி அதிபர் யேசுதானந் தர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிபர்கள், ஆசி ரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (121)


## போதனா ஆசிரியர்களுக்கு விசேட செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் தொழிற்பயிற்சி, எழுத்தறிவு, மொழி அபிவிருத்தி போதனாசிரிய கர்களா இருக்கும் வளவாளருக் குரிய செயலமர்வு நடை பெறவுள் ளதாக வலிகாமம் வலயக்கல்விப பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள முறைசாராக் கல் வித் தொழிற்பயிற்சி நிலையத் தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் தவ றாது போதனாசிரியர் பங்குபற்ற வேண்டும் என கேட்கப்பட்டுள்ள னர். செயலமர்விற்கு வருகை தரும் போதனாசிரியர்கள், யூலை மாத மதிப்பீட்டு வினாவையும், அதற்கான புள்ளிகளையும் கொண்டு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.(06)

## வேம்பு சஞ்சிகை வெளியீடு



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் "வேம்பு" சஞ்சிகை வெளி யீட்டு நிகழ்வு நேற்று மதியம் 12 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி சிவலிங்கராஜா தொழிலதிபர் பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் "வேம்பு" சஞ்சிகையை தொழிலதிபர் பி.நாகரத்தினம வெளியீட்டு வைத்தார்.


## பாடசாலைக்குப் புதிய கட்டடம்

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு பனிக்கன் குளம் பாடசாலை 'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த அனர்த்தங்களி னால் முற்றாகச் சேதமடைந்த இப்பாடசாலை தற்போது 29 இலட சம் ரூபா செலவில் அமைக்கப் பட்டுள்ளது.

இதுவரை பாடசாலையின் தற்காலிக கட்டடத்தில் 50 மாண வர்களுடன் இயங்கி வந்த இப்பா டசாலை 3 ஆம் தவணையுடன் சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள ளதாகப் பாடசாலைச் சமூகத்தி னால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(121)



கோப்பாய் அருள்மிகு வீரகாளி அம்பாள் ஆலய உற்சவ காலங் களில் தெய்வீக இசையரங்கை நடத்திய நயினை குணரத்தினம் - சிவானந்தராசா (நயினை சிவா) திருப்பணிச் சபையினரால் "இசைஞானி" எனம் பட்டம் வழங்கிக்கௌரவிக்கப்பட்டார்.

இவ் கௌரவிப்பு விழாவில் கலந்துசிறப்பித்த யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் கலாநிதி என்.சண்முகலிங்கன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், அருகில் திருப பணிச் சபைத் தலைவர் எஸ்.மகாலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

ஆணவக்காரர்களின் போற்றுதலுக்கோ, தம்மு டன் ஒன்றை விரும்பி பேரம் பேசுவோரின் பிரார்த் தனைக்கோ ஆண்டவன் ஒருபோதும் செவிசாய்ப் பதில்லை.

- காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# நம்மைத் தவிர மனிதரில்லை

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழ்நாட்டில் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஒருமணி நேரம் முழுவதும் மூச்சுவிடாமல் இலங்கை அரசாங்கத்தைத் திட்டியே உரைநிகழ்த்தி சாதனை புரிந்திருக்கிறார். அதேசமயம் மற்றொரு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை அரசின் பிரதிநிதியாக இலங்கை அரசுக் குழுவுடன் சேர்ந்து சென்று இந்திய நாடாளுமன்றத்தில் தமிழக அ.தி.மு.க உறுப்பினர்களின் திட்டுதலை வாங்கிக்கொண்டு திரும்பியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினருக்கு, ஜெயலலிதாவின் கட்சி உறுப்பினர்களால் "இங்கே வராதே, வெட்கம் வெட்கம் திரும்பிப் போ!" என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது குறித்து இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் அதிர்ச்சி வெளியிட்டுள்ளன. அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், "போர்க் குற்றவாளிகளே திரும்பிப் போங்கள்!" என்று கூச்சலிட்டுச் சுட்டுவிரல் நீட்டிய திசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தலையைக் குனிந்தபடி நின்றிருந்தது எப்படி என்று தமிழக ஊடகங்கள் குழம்பிப் போயிருப்பதை அவர்களது பத்திரிகைச் செய்திகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

அவர்களுக்கு இப்போதுதான் கேள்விகள் உண்டாகியிருக்கின்றன. ஆனால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இதுவொன்றும் அதிர்ச்சியோ குழப்பமோ உண்டாக்கும் செய்தி அல்ல. அரசின் சலுகைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் பெற்றபடியும், அரச உயர்மட்டங்களுடனான சந்திப்பிலும் நாடாளுமன்ற விறாந்தைகளிலும் மேலும் தனிச்சலுகைகள் கேட்டபடியும் சிரித்துக் குழையும் அதே முகங்கள் மக்களிடம் வந்து, "அற்ப சலுகைகளுக்காக வாலைக் குழைப்பதா?" என்று தன்மானத் தமிழ்முழக்கமும் அரசெதிர்ப்பு ஆவேசமும் கக்கும் 'தமிழ்ரோச அரசியல்' நமக்கொன்றும் புதிதல்லவே!

இலங்கைக்கு வெளியே தமிழ்ச் சகோதரங்களின் எண்ணப்படி, நாங்கள் இங்கே காட்டுமிராண்டிகள், ரத்தக் காட்டேரிகள், கட்டுவிரியன் வகையறாக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. அவற்றினது அரசிடமிருந்து அற்ப சலுகைகள் வாங்கக் கூடாது; சம்பளம் வாங்கக் கூடாது; அபிவிருத்தி கேட்கக் கூடாது; இப்ப கொஞ்சம் ஆய்க்கினை குறைந்து சந்தோஷமாகத்தான் இருக்கிறோம் என்று வாய் தடுமாறியும் சொல்லிவிடக் கூடாது; பகை மறந்து இனி வாழ முயற்சிக்கலாமே என்று நினைக்கிறோம் என்பது கூட அவர்களுக்குத் தெரிந்துவிடக்கூடாது. அனுதாபம் போய் விடும், அரசியல் செய்யப் பணம் வராது நின்றுவிடும்.

இது தெரியாமல், டெல்லிக்குத்தானே... நம் சக பார்லிமென்ரேரியன்களுடன் இரகசியமாகப் போய்வந்துவிடலாம் என்று நினைத்தது செல்வத்தின் தப்பு. அனுப்பியது கூட்டமைப்பினரின் மாபெரும் தவறு. சிங்களவனோடு சேர்ந்து ஒரே விமானத்தில் பயணிக்கலாமா? ஒரே இடத்தில் போய் இறங்கலாமா? வெளித் தமிழர்களுக்கு, சிங்களவரோடு நாம் சிரித்துக் கதைக்க முடியும், அவர்களும் மனித இனம்தான் என்பது தெரியவரலாமா?

துரோகிகளுக்கான வரைவிலக்கணங்களை தீர்ப்புகளை வடிவமைத்து வழங்கிவரும் கூட்டமைப்பு இதில் ஏன் சறுக்கியது? செல்வத்தை ஏன் அரசுப் பிரதிநிதிகள் குழுவில் அனுப்பியது? அதுவும் இந்தியாவுக்கு? பூமராங் போல துரோகிப்பட்டம் எறிந்தவர் கழுத்துக்குத் திரும்பி வந்து தாக்கும்படியாகி விட்டதே!

வெளிநாடுகளிலுள்ளவர்களின் அனுதாபத்திற்காகவும், அரசியல் செய்ய அவர்கள் அனுப்பும் பணத்திற்காகவும் இங்குள்ள யதார்த்த நிலைமையை மறைப்பதும், மக்களை வதைக்குள்ளாக்கி அனுதாப வீரவசன அரசியலில் குளிர் காய்வதும் நெடுநாளைக்குக் காண்பிக்கக் கூடிய நாடகமல்ல. போலி இலட்சியப் பிழைப்புகளும், தீவிர நடிப்புகளும் வெகு விரைவிலேயே பல்லையிளித்துவிடும்.

மற்றவர்கள் வதைபடும் விதமாகத் தங்கள் இலட்சியப் பிழைப்பை உறுதியாக வைத்துக் கொள்வதில் மனிதாபிமானம் எதுவுமில்லை. சுயநலத்திற்காகப் பிறர் வாழ்வையும் பணயம் வைப்பதே அதுவாகும். பிறரைக் காக்கும் விதமாகத் தாங்கள் விட்டுக்கொடுத்து வாழ்வைக் கொண்டுவருபவர்களே பேராண்மையாளர்கள் என்றும் அவர்களால்தான் உலகம் செழிக்கும் என்றும் இரண்டாயிர வருடத்திற்கு முன்பிருந்தே பேசிவந்திருக்கின்றன இலக்கியங்கள்.


"தமக்கென முயலா நோன்தாள்
*பிறர்க்கென முயலுனர் உண்மையானே"*

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியார் சொல்வது போன்று, நம் வாழ்க்கையையும் அதேசமயம் மற்றவர் வாழ்க்கையையும் நேசிக்கும் மனப்பாங்குதான் நம்மை மனிதர்களாக உயர்த்தும்.

*- ஆசிரியர்.*

# வடபகுதி மக்களுக்கு தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ வலியுறுத்து



(கொழும்பு)

வடபகுதி மக்களின் அபிலாஷைகளைப புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வினை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல் கட்சிகள் எதிர்த்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இதனை வழங்க முடியுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடபகுதி மக்களுக்கு தம்மைத் தாமே ஆளும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்பது எமது நிலைப்பாடாகும். இது தொடர்பில் அம்மக்களின் விருப்பத்தை அறிந்து கொண்டு அதற்கமைய இதனை வழங்க வேண்டும்.

அத்தோடு தற்போதைய சூழ்நிலையில் 13 ஆவது திருத்தத்திற்கமைவான தீர்வு பொருந்தாது. அதேவேளை இத் திருத்தத்திலுள்ள மத்திய அரசுக்கும், மாகாண சபைகளுக்கும் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதேவேளை இந்தத் திருத்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி அதிகாரப் பகிர்வுடனான தீர்வுகளை வழங்க வேண்டும். அத்தோடு பொலிஸ் அதிகாரங்களையும் வழங்கலாம்.

எவ்வாறெனில் இவ் அதிகாரங்களிலுள்ள முக்கியமானவற்றை அதாவது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்களை மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டு சிறு குற்றங்களை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்க முடியும்.

இந்த நாட்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளே அதிகம் உள்ளது. எனவே காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் இணைந்த குழுவை அமைத்து வழங்க முடியும். அதனை நாம் ஆதரிக்கின்றோம்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில பேரினவாதக் கொள்கைகள் கொண்ட அரசியல் கட்சிகள் எதிர்த்தாலும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இதனை வழங்க முடியும்.

18 ஆவது திருத்தம் ஜனநாயகத்திற்கு விரோதமானது. இதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றினேன். ஆனால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியென்ற காரணத்தினால் ஆதரவாக வாக்களிக்கும் தார்மீகக் கடமை உருவானது.

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது ஜனநாயக ரீதியாக தீர்க்கப்பட வேண்டிய விடயமாகும். இவ்விணைப்புத் தொடர்பாக கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை அறிய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பு தேர்தல் ஆணையாளருடன் பேச்சு நடத்தத் தயார்

## சுமந்திரன் எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் இது தொடர்பில் கூடுதலான கருத்துக்களை வெளியிடத் தயாரில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசன எண்ணிக்கை குறைப்பு தொடர்பில் தேர்தல் ஆணையாளருடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடாத்த உத்தேசித்துள்ளோம்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்காத பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பின்நிற்கப் போவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# திருடர்களின் வாள்வெட்டிற்கு இலக்காகிய குடும்பஸ்தர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் மேற்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் இனந்தெரியாத நபர்கள் புகுந்து அங்கு இருந்தவரை வாளால் வெட்டிவிட்டு கொள்ளையடிக்க முயன்றுள்ள சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இரு பிள்ளைகளின் தந்தையான தம்பிராஜா குமாரநாதன் (வயது 33) என்ற நபரே வெட்டுக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர்களில் ஒருவரை பொதுமக்கள் பிடித்து தாக்கிய நிலையில் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் குறித்த நபரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் இரு நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி மற்றும் தென்மராட்சி ஆகிய பகுதிகளில் பெரும்பாலான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் மிகவும் சிறியளவான பகுதிகளில் மாத்திரம் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறுவதால் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் மிக விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்து கொண்டு தமது இடங்களில் குடியமர்த்துதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க முடியும் எனவும் யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பெண்ணின் குழந்தையை சிறுவர் பாதுகாப்புச் சபையில் ஒப்படைப்பு

(கொழும்பு)

குவைத்தில் இலங்கைப் பெண் ஒருவரின் பெண் பிள்ளையொன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைப்பதற்கு அங்குள்ள இலங்கை தூதுவராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பேபி மெரியா என்ற பெயரில் அழைக்கப்படும் மூன்று வயதான அந்தப் பிள்ளை அந்நாட்டு வைத்தியசாலையொன்றில் இருந்தபோது தாம் பொறுப்பேற்றதாக குவைத்திற்கான இலங்கைத் தூதுவர் சீ.ஏ.எச்.எம்.விஜேரத்ன தெரிவித்தார்.

இலங்கைப் பெண் ஒருவர் பாகிஸ்தான் நாட்டவர் ஒருவருடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த தொடர்பின் மூலம் அந்தப் பிள்ளை பிறந்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

எனினும், இரண்டாவது பிரசவத்தின் போது குறித்த இலங்கைப் பெண் உயிரிழந்துள்ளார். தமது பொறுப்பில் உள்ள மூன்று வயதான முதல் பிள்ளையை இவ்வாரத்திற்குள் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குவைத்திற்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

## நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் கிராமத்தில் 16 வருடங்களாக இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இக்கிராம மக்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிற்கு நன்றி தெரிவிக்கின்றனர். இக்கிராமத்திலுள்ள வீதிகள், புனரமைப்பு, சுத்தமான குடிநீரை பெறுவதற்கான வசதிகள், தண்ணீர் தாங்கி வழங்கியமை, கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு, மின்சார வசதிகளைப் பெற்றுத்தர நல்லூர் அமைப்பாளர் இரவீந்திரதாஸன் மற்றும் அமைச்சர் ஆகியோர் செயற்பட்டு தமது குறைகளை நீக்கியுள்ளதாக இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஆய்வுகூட வசதி இன்றி மல்லாவி வைத்தியசாலை

(அம்பலப்பெருமாள்)

மல்லாவி மருத்துவமனை ஊடுகதிர் (எக்ஸ்ரே) சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆய்வுகூட வசதிகள் இல்லாத நிலையில் இயங்கி வருகிறது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் முக்கியமான மருத்துவமனையான இம்மருத்துவமனையில் மேற்படி வசதிகள் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் கிளிநொச்சி, வவுனியா மருத்துவமனைகளுக்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

இம்மருத்துவமனையில் இவ்வசதிகள் ஏற்படுத்தப்பட்டால் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவு ஆகிய பிரிவுகளில் மீள்குடியமர்ந்த மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (121)

## ஆங்கில தினப் போட்டியில் இரு மாணவிகள் தெரிவு

(ஒட்டுசுட்டான்)

மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டியில் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவிகள் இருவர் தெரிவாகியுள்ளனர்.

இதில் பேச்சுப்போட்டியில் கனகரத்தினம் கஸ்தூரியும், உறுப்பெழுத்துப் போட்டியில் சத்தியசீலன் நிவேதிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் இம்மாணவிகள் எதிர்வரும் 5ஆம் திகதி மன்னாரில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். (101)

## குளப் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு பனிக்கன் குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் 100 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இக்குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால், இக்குளத்து நீரை பயன்படுத்தி விவசாயம் செய்யும் மக்கள் எதிர்காலத்தில் பெரும் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (121)

## இடைநடுவில் நிறுத்தம்

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் அலைகற்கள் அடுக்கும் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

குளத்தின் அணைக்கட்டினை பாதுகாப்பதற்காக குளத்தின் உட்புறமாக அடுக்கப்படும் கற்கள் தற்போது அரைகுறையாக காணப்படுகிறது.

சில இடங்களில் குளத்தின் அணைக்கட்டு அரிப்பெடுக்காமல் அடுக்க வேண்டி உள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (121)

# புனரமைக்கப்பட்ட விவேகானந்த வித்தியாலயம் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட விவேகானந்தா வித்தியாலயம் நேற்று முன்தினம் சம்பிரதாய பூர்வமாக பாடசாலை சமூகத்திடம் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தவிசாளருமான மு. சந்திரகுமாரால் கையளிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்துக்கு பின்பு புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்ட இப்பாடசாலை க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்களை கொண்டுள்ளது 450 வரையான மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலை நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரால் திறந்துவைக்கப்பட்டதோடு புதிதாக ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியில் நிரந்தரக் கட்டடம் ஒன்றுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது அத்தோடு அப்பாடசாலை மாணவர்கள் அனைவருக்குமான கழுத்துப்பட்டிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் உரையாற்றிய கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. குருகுலராஜா பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர்களும், பாடசாலை சமூகம் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்றும் பாடசாலையினை தோற்றுவித்து அதனை பல வளங்களுடன் நிமிர்ந்து நிற்க மிகுந்த அக்கறையோடு செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களையும் அவரது கட்சியினருக்கும் மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பாடசாலை அதிபர் திருமதி மாணிக்கவாசகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், கோட்டக்கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம், மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (29)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உயர்தரப் பரீட்சையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று புதன்கிழமை 8.30 மணி முதல் 4.30 மணி வரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்., தீவகம், தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறும் குறித்த நேரத்திற்கு கலந்துரையாடல் ஆரம்பமாகுமெனவும்யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசலிங்கம் அறிவித்துள்ளார்.(எஸ்)

## நீர் நிலைகளில் நீர் இன்றி அவதியுறும் கால்நடைகள்

(முல்லைத்தீவு)

இம்முறை நாட்டில் மழை வீழ்ச்சி குறைந்துள்ளதன் காரணத்தால் நீர் நிலைகளில் நீர் இன்றி கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக நிலவும் வறட்சியான காலநிலையினால் கால்நடைகள் நீர் இன்றி அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உமையாள்புரம், பரந்தன், கோரக்கன்கட்டு, முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, தர்மபுரம் ஆகிய பிரதேசங்களில் மேய்ச்சல் தரவைகளாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் இப்பிரதேசங்களைச் சுற்றியுள்ள நீர்நிலைகளில் நீர் இல்லாததால் கால்நடைகள் மேய்ந்துவிட்டு நீருக்குப் பெரும் கஷ்டப்படுவதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர். (40)

## குளப்புனரமைப்புப் பணியால் வாடிய நிலையில் பயிர்கள்

(அம்பலப்பெருமாள்)

அக்கராயன்குளம் புனரமைக்கப்பட்டு வருவதன் காரணமாக குளத்தின் கீழான பகுதிகள் பெரும் வறட்சியான நிலையை அடைந்துள்ளன.

கடந்த காலங்களில் குளத்து நீர் தொடர்ச்சியாக வாய்க்கால்கள் வழியாகப் பாய்ந்து பசுமையான பகுதிகளாக இருந்தவை தற்போது வறட்சியான பகுதியாக மாறி தென்னைகள் உட்பட பயன்தரு மரங்கள் வாடிய நிலையில் காணப்படுகின்றன்.

இக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததும் இக்குளத்து நீர் விரைவாக வழங்குவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

அக்கராயன் பகுதி கிணறுகளிலும் தற்போது நீர் மட்டம் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (121)

## நீதிமன்றத்தால் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 105 கிராம் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றத்தினால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றத்துக்காக கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்ற நீதிபதி ஆ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிட்டதுடன் தண்டம் செலுதத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

□□□


(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இருவருக்கு யாழ். நீதிமன்றத்தால் தலா ஐந்து ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணை மேற்கொண்ட நீதிபதி இருவருக்கும் தலா 5000 ரூபா அபராதம் செலுத்துமாறும், அபராதத்தை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (எஸ)





யாழ். மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 195ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வில் மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (படம் : சுமித்தி)

# மாணவர்கள் தாம் கல்வி கற்ற பாடசாலைக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்

## ஊர்காவற்துறை நீதிபதி அறிவுரை



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மாணவர்கள் கலாசார பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றக்கூடிய வகையில் ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மத்திய கல்லூரியில் 195 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கும் பரிசளிப்பு விழாவுக்கும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,


ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கலாசார பண்பாடுகளை பேணும் வகையில் ஒழுக்க விடயங்களையும் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். அதன்மூலமே. மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும்போது ஒழுக்க சீலரான பிள்ளைகளாக மதிக்கப்படுவார்கள்.

இங்கு கல்வி கற்ற மாணவர்கள் உயர் பதவிகளில் இருக்கிறார்கள் இந்த உயர்வு நிலை பாடசாலை சமூகத்தினருக்கும் பெரும் பங்குண்டு.

நாட்டுப்பற்று ஊர்பற்று, பாடசாலையை பற்று என்பன மாணவர்கள் மத்தியில் நிலைத்திருக்க வேண்டும் அத்துடன் பிறந்த நாட்டையும் கல்வி பயின்ற பாடசாலையையும் மாணவர்கள் மறக்காது நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் எல் ஓங்கார மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் கலந்து கொண்டார்.

தொடர்ந்து மாணவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (எஸ்)



நேற்று முன்தினம் நடைபெற்ற கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் (கலட்டி அம்மன் கோயில்) ஆலய தேர்த்திருவிழாவில் அம்பாள் தேரில் ஆரோகணித்திருப்பதைக் காணலாம். (74)

# சட்ட மருத்துவர் இன்மையால் சடலங்கள் ஏற்பதில் சிரமம்

(அம்பலப்பொருமாள்)

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சட்ட மருத்துவர் பணியில் இல்லாததன் காரணமாக உயிரிழப்புக்கள் இடம்பெறும் போது சடலங்களை பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சட்ட மருத்துவர் ஒருவர் வருகை தந்து உயிரிழப்புக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சடலங்கள் கையளிக்கப்பட்டுவருகின்றன.

இதனால் உயிரிழப்புக்கள் ஏற்பட்ட குடும்பங்கள் சடலங்களை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாத நெருக்கடி நிலை காணப்படுகிறது. எனவே கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு சட்டமருத்துவர் ஒருவரை பணிக்கு நியமிக்கும் படி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (121)

# துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதியில் மூன்று நிலையங்களில் உயர்தரப் பரீட்சை

(அம்பலப்பொருமாள்)

துணுக்காய் கல்வி வலயத்தின் 3 பரீட்சை நிலையங்களில் உயர்தரப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் க. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய 3 பரீட்சை நிலையங்களில் உயர்தரப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற துணுக்காய் வலயத்தில் உயர்தரப்பரீட்சை ஏற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டத்தில் அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பான நடைமுறைகள் மற்றும் வினாத்தாள் விநியோகம் தொடர்பாகவும் கலந்துரையடப்பட்டது..

இந்நிகழ்வில் பரீட்சை நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பரீட்சைகளுடன் தொடர்புடைய அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (121)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(03.08.2011 – புதன்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்

ஆடி 18 ஆம் நாள்.

இராகுகாலம் 12.04–1.34, சுபநேரம் 04.34 –6.04,

நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 2.10 வரை

திதி: சதுர்த்தி பி.ப 4.46 வரை

நாக சதுர்த்தி விரத நன்னாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– காரிய சித்தி, பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, சுற்றத்தார் ஆதரவு.

ரிஷபம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் சலனம், தேக ஆரோக்கியம் நண்பர் தொல்லை.

மிதுனம் :–பணம் வரவு, மனத்துயர், குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக சுகம் பாதிப்பு, உறவுக்குள் பகை.

கடகம்:– மனத்துயரம், பண வரவு, சுற்றத்தார் ஆதரவு, நண்பர் தொல்லை, தேக நலம்பாதிப்பு.

சிம்மம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, உடல் நலக் குறைவு, வைத்தியச் செலவு, சுபகாரியப்பேச்சு

கன்னி :– பணக் கஷ்டம், சகோதரபாசம், குடும்பத்தில் கவலை, உடல் உபாதை மருத்துவச் செலவு.

துலாம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, சுப காரியம், தேக ஆரோக்கியம், நண்பர் வருகை.

விருச்சிகம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, சுற்றம் ஆதரவு, உடல் நலம் பாதிப்பு, வைத்தியச் செலவு.

தனுசு:– பணக் கஷ்டம், தேக நலம்பாதிப்பு, மனச் சஞ்சலம், சகோதர வெறுப்பு, தெய்வதரிசனம்,

மகரம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதர பாசம், தேக ஆரோக்கியம், இறைவழிபாடு.

கும்பம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் சஞ்சலம், உடல் நலக்குறைவு, வைத்தியச் செலவு, தெரு விபத்து.

மீனம்:– பணக் கஷ்டம், உளநலம் பாதிப்பு, குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், தெய்வதரிசனம்.

# ஆங்கில தினப் போட்டியில் மாணவிகள் சாதனை



செல்வி நிதுஷா குகனேசன்

(பருத்தித்துறை)

2010ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டஆங்கில தினப் போட்டியில் தரம் 6ற்கான சொல்வதெழுதல் போட்டியில் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த செல்வி நிதுஷா குகனேசன் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். இதேவேளை, யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய தரம் 4 மாணவி செல்வி ராகவன் துளக்சிகா தேசிய மட்ட ஆங்கில மொழி உறுப்பெழுத்துப்போட்டியில் முன்றாமிடம் பெற்றுச் சாதனை படைத்துப் பாடசாலைக்குப் பெருமைசேர்த்துள்ளார். (109)

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் விசேட தேவை உள்ள மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடை பெறவுள்ளது.

விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி 9.9.2011 வெள்ளிக்கிழமை நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரியரை தவறாது கலந்து கொள்ளச் செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் போட்டி தொடர்பான அறிவுறுத்தல்களும் விண்ணப்பப் படிவங்களும் வழங்கப்படவுள்ளதால் சகல பாடசாலைப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொண்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

# ஏமாறும் விண்ணப்பதாரிகள்

வன்னி மாவட்டத்தில் 18வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தகைமைக்கேற்ப வேலைவாய்ப்பை வழங்குவதாக கூறி நிறுவனம் ஒன்று பதிவுகளை மேற்கொண்ட நிலையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது உள்ளதாக பதிவுகளை மேற்கொண்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இப்பதிவுகளை மேற்கொண்டவர்கள் குறித்த நிறுவனத்தின் நேர்முகத் தேர்வுக்காக வவுனியா சென்று வந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பதிவு நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நேர்முகத் தேர்வுக்கு தோற்றியும் இதுவரை எந்தவித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என பதிவுகளை மேற்கொண்டவர்கள் தெரிவிக்கின்றனர். (101)

படிக்கிற காலத்தில உப்பிடி விசயம் இருந்ததை நான் கண்ணைப் படைச்சும் காணேல்ல: இப்பதான் இந்த விண்ணாணங்களெல்லாம் நடக்குது.

என்னெண்டே கேக்கிறியள் எனக்கு எல்லாமா எட்டுப் பேரைப்புள்ளையள் இருக்கு அதில சின்னன் ரெண்டைத் தவிர மற்றதெல்லாம் படிக்குதுகள்

எல்லாம் ஒவ்வொரு மட்டை ஒண்டைக் கொண்டந்திருக்குதுகள் அதென்னெண்டா அந்த மட்டேல்ல கட்டங்கட்டமாச் சதுர அடையாளம் போட்டிருக்கு அதில ஒரு சதுரத்தில புள்ளடியைப் போட்டுட்டு 100 ரூபா தரட்டாம்.

உப்புடி இதுக்கு முன்னமும் கொண்டந்ததுகள்தான்: ஞாபகமாயிருக்கு 50 சதம் ஒரு ரூபா, பத்து ரூபா எண்டுதான் இருக்கும்.

இந்த முறை பொல்லால அடிச்சாப்போல 100ரூபாவாம். 10, 20, கட்டங்களுக்கும் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாச் சேரும்.

இதை ஆகக் கடைசி, போன தையிலதான் சேந்தவனிட்டேம் பள்ளிக்கூடத்தால குடுத்தனுப்பி இருக்குதுகள்.

பள்ளிக்கூடத்தில சேர்க்கேக் ஆயிரத்தில இருந்து லட்சம் வரைக்கும் டொணேஷன் எண்டு வாங்கினம். உப்புடியேன் காசுகளை வாங்குறீங்க அரசாங்கம் இலவசமாச் சேர்க்கிறேண்டு சொல்லுது.

அதுவுமில்லாமல் காசு கேட்டாத் தங்களுக்கு அறிவிக்கும்படி கல்வி அதிகாரிகள் பேப்பரில அறிவிச்சிருக்கினமெண்டால், பள்ளிக் கூடத்த விருத்தி செய்யத்தான்.

அதோட மாணவர்களின் விளையாட்டு மன்றம் விழாக்களை நடத்துறேக்கு அரசாங்கம் காசு தராது. அப்ப உப்படி வாங்கினாத்தான் பள்ளிக் கூடத்தை வசதியாக்கட்டுறேக்கும், விழாக்களை கோலாகலமாக நடத்திறேக்கும் உதவும் எண்டிச் சினம்.

பிறகும் பிள்ளையளை மற்ற வேட்ட உப்படிக் கையேந்திறேக்கே நாங்க படிப்பிக்க பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவைக்கிறம்.?

ஆயிரக்கணக்கில் டொணேஷன் வாங்கிப் போட்டும் எங்கட புள்ளையள பள்ளிக்கூட நிர்வாகங்கள் ஒரு மட்டையைக் குடுத்து அனுப்பி மேலும், மேலும் காசு பறிக்கிறே ஏனெண்டு கேக்கிறன்.

சின்னன், சின்னனாத் துடங்கி இப்ப நூறு ரூபாக்கணக்கு வந்திட்டுது: பேசாம விட்டா ஆயிரக்கணக்குக்கும் வரும் போல கிடக்கு.

நான் தெரியாமல் கேக்கிறன் என்ர சின்ன மூளைக்கு விளங்கிற மாதிரிக்கு பள்ளிக் கூடம் துடங்கேக்கயே வாங்கிற காசுகள் கோடிக் கணக்கில சேரும்.

அதை வைச்சு என்ன செய்யிறியள்? உண்ணாணைப் பாருங்கோ இனிமேலாவது குழந்தையளிட்டை உந்த மட்டையளை அடிச்சுக்குடுத்துவிடா தேங்கோ! வேணுமெண்டாப் பெற்றோரிட்ட பிறகும் கேட்டு வாங்குங்கோ: அதுகள் இருந்தாத் தருங்கள் தான! எல்லாரும் வெளிநாட்டு வருமானத்திலயே வாழுனம்.?



# 56ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்



(வடமராட்சி)


வடமராட்சி புலோலி வடமேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 56ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டது.

நிலையத் தலைவர் ச.ரஜனிகாந்த் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது. ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மற்றும் மரதன் ஓட்டம், கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் பட்டது. மரதன் ஓட்டப் போட்டியினை ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

சைக்கிள் ஓட்டப் போட்டியினை பருத்தித்துறை ராஜன் சைக்கிள் வேக்ஸ் உரிமையாளர் பொ.இராஜதுரை ஆரம்பித்து வைத்தார். மரதன் ஓட்டம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைச் சந்தியில் ஆரம்பித்து பருத்தித்துறை நகரம் வழியாக பொலிஸ் நிலையம் ஓடக்கரை தம்பசிட்டி நாவலடிச் சந்தி மாலுச்சந்தி வதிரிச் சந்தி நெல்லியடிச் சந்தி ஊடாக வந்து புலோலி வடமேற்கு முருகன் கோவிலடியில் முடிவடைந்தது.

இதேவேளை அறிவகம் நிலையத்தின் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் மற்றும் வெளிக்கழகங்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியும் 1000 மீற்றர் ஓட்டம் 800 மீற்றர் அஞ்சலோட்டம் மற்றும் கயிறு இழுத்தல் போட்டியும் இடம்பெற்றது. இதில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீ.டி. ஜெயரட்ணசிங்க வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் பல்கலைக்கழகம்!



(யாழ்ப்பாணம்)

ஜெயரூபனின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்தின் இறுதிப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், பற்றீசியன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பற்றீசியன் அணி, 45.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரியூடர் 29, எரிக் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனார்த்தனன் மூன்று, ஜெயரூபன் நான்கு, கிரிசாந், நவநந்தன், சுஜன்தன் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். பல்கலைக் கழக அணி 45.1 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இவ்வெற்றியின் மூலம் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியையும் பெற்றுக் கொண்டது. இதில் ஜெயரூபன் 50, லவன் ஆட்டமிழக்காது 46, செல்ரடன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரிக் இரண்டு, கிளின்ரன், முரளி தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஜெயரூபன் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான ஈ.எஸ். தம்பையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும், பணப் பரிசும் இறுதிப் போட்டி நிகழ்வில் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றதன் மூலம் மேலும் ஐந்து புள்ளிகளை பெற்று, யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 2011ஆம் ஆண்டிற்கான சிறந்த அணித் தெரிவில் 30 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெஸ்லே கிண்ண வலைப்பந்தாட்டம் மூன்றாமிடம் சண்டிலிப்பாய் இந்து

(யாழ்ப்பாணம்)

நெஸ்லே நிறுவனத்தினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திய 16 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

களுத்துறை பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கொழும்பு பாலிகா மகாவித்தியாலயமும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஆரம்பத்தில் சமநிலையில் காணப்பட்டாலும் போட்டி ஆரம்பமாகிய சில நிமிட நேரத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி போட்டியை வேகப்படுத்தியதைத் தொடர்ந்து முன்னிலைக்குச் சென்றது. முதல் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 08 : 04 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் காணப் பட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 08 : 03 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லாரி 16 : 07 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொழும்பு பாலிக மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நொஸ்லே கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் 12 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், சுழிபுரம் விக்டோரியாயும், 14 வயதுப் பிரிவில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாயம், வட இந்து மகளிர் கல்லூரி, 16 வயதுப் பிரிவில் வட இந்து மகளிர், அராலி சரஸ்வதி வித்தியாலயம் போன்ற பாடசாலை வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த வடமாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான தேசிய மட்ட மெய் வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 1ஆம், 2ஆம் திகதிகள் வரை நடைபெறவுள்ளதாக வடமாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி மகரகமவில் அமைந்துள்ள ஜிககம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. வடமாகாணத்திலிருந்து பல்வேறு மெய்வல்லுநர் போட்டிகளிலும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 300இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர் என்பது சிறப்பம்சமாகும்.

இந்த வீர, வீராங்கனைகளின் வதிவிடப் பயிற்சி முகாம் இம்மாதம் 18, 19, 20, 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் முன்னெடுத்து வருகின்றார்.

தேசிய மட்டப் போட்டிகளில் பங்கெடுக்கவுள்ள வீர, வீராங்கனைகளிற்கான பயிற்சிகளை வழங்குவதற்கென இலங்கையின் பல பாகத்திலிருந்தும் பயிற்றுவிப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (06)

# ஸ்கந்தா வெற்றி

(யாழ்ப்பாணம்)

சுவிதன், பிரசாத் ஆகியோரின் சிறப்பான சகலதுறை ஆட்டத்தின் மூலம் சங்கரத்தை மத்திய மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

இப்போட்டி கடந்த 18ஆம் திகதி சங்கரத்தை மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சங்கரத்தை மத்திய மகா வித்தியாலய அணி, 36.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுஜிகரன், கமினஸ் தலா 23, கஜனன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத் நான்கு, சுவிதன் மூன்று, கதியோன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 28.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுவிதன் 34, பிரசாத் 32, நிரோஜன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை மதுசன் கைப்பற்றினார். (44)

# பாடசாலை அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டு 8இல் ஆரம்பம்!

(கொழும்பு)

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கிடையேயான முதலாம் கட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் முதல் கட்டமாக ஆண்கள், பெண்களுக்கான 13 போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகளின் விபரம் வருமாறு:-

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் வலைப்பந்தாட்டம் 15, 17, 19 வயதுப் பிரிவினர்களுக்கு பண்டாரவளை நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் 17, 19 வயதுப் பிரிவினர்களுக்கான ஆண்களுக்கும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டம் பதுளை வின்சன்டயஸ் விளையாட்டரங்கு பதுளை கால்பந்தாட்ட மைதானம் பதுளை துடுப்பாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான சதுரங்கம் 15, 19 வயதுப் பிரிவினர்களுக்கானது. பதுளை மத்திய மகாவித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் ஹாலியல மத்திய மகாவித்தியாலய மைதானம் ஹாலியல பிரதேச சபை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

10ஆம் திகதி ஆண்கள், பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டி பதுளை நகர மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான கரம் 15, 19 வயதுப் பிரிவினர்களுக்கானது. பதுளை விசாகா பாலிகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான நீச்சல் போட்டி கொழும்பு ஆனந்தா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான ஜூடோ கொழும்பு ஜூடோ சங்க மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான குத்துச்சண்டை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.


08ஆம் 09ஆம் 10ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான எல்லே. சீதுவ நகரசபை மைதானம், சீதுவ உடம்பிட்டிய குலசிங்க மகாவித்தியாலயம், ஏக்கல ஜீ.வி.சேனநாயக்கா வித்தியாலயம், சீதுவ ரந்தொழவ பஞ்ஞாரத்த பாலிக வித்தியாலயம், ஜாலய நகரசபை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

09ஆம் 10ஆம் திகதிகளில் the school boy contest பாணந்துறை வாதுவ மத்திய மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

09ஆம் - 10ஆம் திகதிகளில் பாரம் தூக்கும் போட்டி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கபடி கொரனை தக்சிலா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

# கிளாசிக் ரென்னிஸ் கிண்ணத்தை செரீனா வில்லியம்ஸ் கைப்பற்றினார்





(ஸ்டான்போர்ட்)

ஸ்டான்போர்ட் கிளாசிக் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை அமெரிக்காவின் செரீனா வில்லியம் கைப்பற்றிக் கொண்டார்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் ஸ்டான்போர்ட் கிளாசிக் ரென்னிஸ் போட்டி நடந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 13 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், 3ஆம் நிலை வீராங்கனை மரியோன் பார்டோலியை (பிரான்ஸ்) சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டில் பார்டோலி, செரீனாவுக்கு சவாலாக விளங்கினார். அடுத்த செட்டில் அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. முடிவில் செரீனா வில்லியம்ஸ் 7-5, 6-1 என்ற செட் கணக்கில் பார்டோலியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கடந்த ஆண்டு நடந்த விம்பிள்டன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற பின்னர் செரீனா வெல்லும் முதல் பட்டம் இதுவாகும். காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஒரு ஆண்டு காலம் போட்டியில் இருந்து விலகி இருந்த செரீனா கடந்த ஜூன் மாதம் மீண்டும் களம் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பார்மர்ஸ் கிளாசிக் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், பிலிப்பைன்சின் டிரிட் கான்ராடு ஹுயு ஜோடி தோல்வி அடைந்து இரண்டாவது இடம் பிடித்தது.

அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், ஆண்களுக்கான ஏ.டி.பி., பார்மர்ஸ் கிளாசிக் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதன் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், பிலிப்பைன்சின் டிரிட் கான்ராடு ஹுயு ஜோடி, பகாமசின் மார்க் நோவல்ஸ், பெல்ஜியத்தின் சேவியர் மாலிசி ஜோடியை எதிர்கொண்டது. இதில் கடைசி வரை போராடிய சோம்தேவ் ஜோடி 6-7, 6-7 என்ற நேர் செட்டில் அதிர்ச்சி தோல்வி அடைந்து இரண்டாவது இடம் பிடித்தது.

## சம்பியனானது சானியா ஜோடி



(நியூயோர்க்)

சிட்டி ஓபன் மகளிர் ரென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா ரூஷ் வெடோவா (கஜகஸ்தான்) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் காலேஜ் பார்க்கில் நடந்த இறுதிப் போட்டியில் ஓல்கா கோவார்ட்சோவா (பெலாரஸ்) ரூ குட்ரியாவ்ட்சேவா (ரஷ்யா) ஜோடியுடன் மோதிய சானியா ஜோடி 6:3, 6:3 என்ற நேர் செட்களில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. நடப்பு டபுள்யு.டி.ஏ. சீசனில் இரட்டையர் பிரிவில் சானியா பெறும் 3ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி குறித்து குறிப்பிட்ட சானியா ஜோடி: சிறப்பான வெற்றியாக இதைக் கருதுகின்றோம். அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கு நல்ல பயிற்சியாகவே இதைக் கருதுகின்றோம். அதில் வெற்றிபெற முழு முயற்சி மேற்கொள்வோம் எனத் தெரிவித்தனர்.

## துப்பாக்கி சுடுதல் போட்டி தரவரிசையில் முதலாமிடம்



(புதுடில்லி)

இந்திய வீரர் ரோஞ்சன் சோதி துப்பாக்கி சுடுதல் டபுள் டிரேப் பிரிவில் உலக தரவரிசையில் முதல் நிலை இடத்தைப் பிடித்துள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம், கொமன்வெல்த் விளையாட்டு போட்டியில் வெள்ளி, உலகக் கோப்பை போட்டியில் வெண்கலம் என்று தொடர்ச்சியாகப் பதக்கங்களைக் குவித்து வரும் ரோஞ்சன் சோதி, கடந்த ஆண்டு நடந்த உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் 192/200 புள்ளிகளுடன் தங்கப்பதக்கம் வென்று அசத்தியது குறிப்பிடத்தக்கது.

டபுள் டிரேப் பிரிவில் உலகின் முதல் நிலை வீரரான அமெரிக்காவின் ஜோஷுவா ரிச்மாண்டை பின்னுக்குத் தள்ளி ரோஞ்சன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், முதல் நிலை இடத்தைப் பிடித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்து லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்ல முயற்சி செய்வேன்.

தொடர்ந்தும் முதல் நிலையைத் தக்கவைப்பது என்பது சிறந்த ஆட்டத் திறன் ஊடாகவே முடியும். அதற்கான முழு முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றேன். இந்தியாவில் இளம் வீரர்கள் துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஆர்வமின்றி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இளம் வீரர்கள் அதில் கூடுதல் ஆர்வம் காட்டி தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். அப்போது நாடும் பெருமை அமையும் என்றார்.

## இந்திய அணியின் தோல்விக்கு காரணம் கூறுகின்றார் டோனி

(லண்டன்)


தொடர்ந்து போட்டிகளில் விளையாடி வருவதாலும், முன்னணி வீரர்கள் காயமடைந்திருப்பதாலும் அணிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதுவே தோல்விகளுக்குக் காரணம் என்று இந்திய தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியை விட மோசமான தோல்வியை நொட்டிங்காமில் சந்தித்துள்ளோம். ராகுல் டிராவிட், வி.வி.எஸ்.லட்சுமனைத் தவிர வேறு யாருமே சரியாக ஆடவில்லை. இந்த தோல்விக்கு நானே பொறுப்பேற்கிறேன். முன்னணி வீரர்கள் காயமடைந்திருப்பது அணிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் தொடர்ந்து நமது வீரர்கள் போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர். இதனால் சோர்வைச் சந்தித்துள்ளனர். இதுவும் தோல்விக்கு முக்கிய காரணம். வீரேந்திர சேவாக் இல்லாததும் அணிக்கு மிகப் பெரிய பின்னடைவாக அமைந்துள்ளது. அவர் இல்லாததால் நல்ல அடித்தளத்தை அமைக்க முடியாமல் போய்விட்டது.

வரும் போட்டிகளில் நாங்கள் எழுச்சி அடைந்து வெற்றிகளைப் பெற முயற்சிப்போம். இதற்காக இறுதிவரை போராடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## பெல்லை மீண்டும் அழைத்ததில் சச்சினுக்கு முக்கிய பங்குண்டாம்



(லண்டன்)

டிரண்ட் பிரிட்ஜ் டெஸ்ட் கிரிக்கட் போட்டியின் 3ஆம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் இயன் பெல் ரன் அவுட் ஆன பின்னர் அவரை மீண்டும் ஆட இந்திய அணி அழைத்தனர்.

அதன் முடிவில் சச்சினின் பங்கே அதிகமிருந்ததாக இந்திய அணிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இங்கிலாந்து பத்திரிக்கை செய்திகளின் அடிப்படையில் டோனி ரன் அவுட் முடிவை திரும்பப் பெறவிரும்பவில்லை என்றும் சச்சினின் தலையீட்டினால் தான் அணி வீரர்கள் அனைவரும் பெல்லை மீண்டும் துடுப்பாட்டம் செய்ய அழைக்க ஒப்புக் கொண்டனர் என்றும் பத்திரிக்கை செய்தி தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் டோனியிடம் நீங்கள் ரன் அவுட்டிற்கு முறையீடு செய்தீர்களா என்று 3 முறை கேட்கப்பட்டது. அவர் உறுதியாக ஆமாம் என்றார். பிறகு பிளவரும் ஸ்ரோஸும் இந்திய அணித் தலைவர் டோனியிடமும், பிளெட்சரிடமும் பேசிய போதும் டோனி அவுட் அவுட் தான் என்று கூறியதாகவும் தெரிகிறது. ஆனால் ஓய்வறையில் சச்சின் டெண்டுல்கர் பெல்லை மீண்டும் அழைக்குமாறு வலியுறுத்தியதாலேயே டோனி ஒப்புக் கொண்டார் என்று அந்தப் பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 20 வயது உலகக் கிண்ணக் கால்பந்து ஸ்பெயின் அணி அபார வெற்றி பெற்றது



உலகக் கோப்பை (20 வயதுக்குட்பட்டோர்) காலபந்து தொடரின் லீக் போட்டியில், ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது.

கொலம்பியாவில், பிபா 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை கால்பந்து தொடர் நடககிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த "சி" பிரிவு லீக் போட்டியில் ஸ்பெயின், காஸ்டா ரிகா அணிகள் மோதின.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்பெயின் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெயின் சார்பில் ரோட்ரிகோ (14, 48ஆவது நிமிடம்), கோகி (81ஆவது நிமிடம்), இஸ்கோ (94ஆவது நிமிடம்) கைகொடுத்தனர். காஸ்டா ரிகா அணிக்கு ஜான் ருயிஸ் (65ஆவது நிமிடம்) ஆறுதல் அளித்தார். "சி" பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் அவுஸ்ரேலியா, ஈகுவடோர் அணிகள் மோதின. இப்போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது. "டி" பிரிவில் நடந்த லீக் போட்டிகளில் நைஜீரியா (எதிர்-கவுத்திமாலா), சவுதி அரேபியா (எதிர்-நைஜீரியா) உள்ளிட்ட அணிகள் வெற்றி பெற்றன.

## சிரேஷ்ட வீரர்களை ஒதுக்க பாக். கிரிக்கெட் சபை சதி!

(லாகூர்)

சிரேஷ்ட வீரர்களை அணியில் இருந்து ஒதுக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சதி திட்டம் தீட்டி செயற்படுத்தி வருகிறது என பாகிஸ்தானின் சகலதுறை வீரர் அப்துல் ரசாக் தெரிவித்துள்ளார். ஒப்பந்தப் பட்டியலிலிருந்து ரசாக் உள்ளிட்ட ஐந்து பேரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நீக்கியதைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு ரசாக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சிரேஷ்ட வீரர்களை அணியிலிருந்து ஒதுக்கிக் கொள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செயற்பட்டு வருகின்றது. இதற்காக ஒரு குழுவினர் திட்டமிட்டு படிப்படியாக மூத்த வீரர்களுக்கு கல்தா கொடுக்கும் வேலையை செய்து வருகின்றனர். இது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு நல்லதல்ல. இந்த செயல் பாகிஸ்தான் அணியில் வருங்காலத்தை பாதிக்கும் செயலாகும் என்று தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகம், மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசாங்கம் தோல்வியைக் கண்டு வருகின்றது

## - சர்வதேசதலையீட்டிற்கும் இதுவே காரணம் என்கிறார் ரில்வின்

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் தோல்வி கண்டு வருகின்றது. இதனால், சர்வதேச குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வேலியில் போன ஓணானை மடிக்குள் விட்ட கதையாகி பெரும் அவஸ்தைகளை அரசாங்கம் எதிர்கொள்ளப் போகின்றது என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் இலங்கைக்கு எதிரான சர்வதேச நாடுகளின் குற்றச்சாட்டுக்களுக்கும் தலையீடுகளுக்கும் சாதகமான சூழல் அமையப் பெறுகின்றது. அது எந்த வகையிலும் நாட்டின் எதிர்காலத்திற்கு சுபயோகமாக அமையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ரில்வின் சில்வா தொடர்ந்தும் கூறுகையில், சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. குறிப்பாக போர் குற்றச் சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்தும் நடவடிக்கைகளில் மிகவும் தீவிரமாக சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாட்டின் முன்னுள்ள சவால்களை கருத்தில் கொண்டு செயற்படாமல் அரசாங்கம் தனது பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் சர்வதேச வலையில் மாட்டிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.



உள் நாட்டில் ஊர் ஊராகச் சென்று ஜனாதிபதியும், அவருடைய சீடர்களும் இலங்கைக்கு எதிராக சர்வதேசம் சதி செய்கின்றது, அதற்கு எதிராக மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் கூறி வருகின்றனர்.

ஆனால் சர்வதேச தலையீடுகளுக்கு அரசாங்கமே வழி வகுத்துள்ளது. ஜனநாயக சூழலை உறுதிப்படுத்தாமல் பொது மக்கள் மீது அடக்கு முறைகளையும், தாக்குதல்களையும் பிரயோகித்து வருகின்றது.

அது மட்டுமன்றி ஊடகவியலாளர்கள் ஊடக நிலையங்கள் உட்பட ஜனநாயக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு இது வரையில் காணாமல் போனவர்கள், தாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்காது இழுத்தடிப்புக்களை மேற்கொள்கின்றது இறுதியாக உதயன் பத்திகையின் பிரதம ஆசிரியரும் தாக்கப்பட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்களினால் மேலும் சர்வதேசத்தின் தலையீடுகள் அதிகரிக்கும் நிலையே உருவாகியுள்ளது எனக் கூறினார்

# குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டுக்கு எதிராக செயற்படும் ஜே.வி.பி.



குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டுக்கு எதிராக ஜே.வி.பி. செயற்பட்டு வருவதாக ஜே.என்.பி கட்சியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.


புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து கொண்டு நாட்டுக்கு எதிராக ஜே.வி.பி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் புலம்பெயர் தமிழர்கள் முனைப்பு காட்டி வருவதாகவும், அந்த முனைப்புக்களுக்கு ஜே.வி.பி ஒத்துழைப்பு வழங்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போதிலும் ஆயிரக் கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.யினர் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தனர். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் விமல் வீரவன்ச கருத்து வெளியிட்டுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை தமிழ் அரசியல் கைதிகளாக வெளிக்காட்ட ஜே.வி.பி முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்திற்கு அவதூறு ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஜே.வி.பி தீவிரமாக இறங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# இறுதிப் போரில் மக்கள் பலியானது உண்மைதான் முதன் முறையாக அரசாங்கம் ஒப்புக்கொண்டது



(கொழும்பு)

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் அப்பாவி தமிழ் மக்கள் பலியானது உண்மை தான் என்று முதல்முறையாக இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், இராணுவத் தாக்குதல் நடக்கும்போது அப்பாவிகள் பலியாவது தவிர்க்க முடியாதது என்றும் இலங்கை அரசு கூறியுள்ளது. இலங்கைப் போரில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள் என்று சில மாதங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையைத் தொடர்ந்து மறுத்துவந்த இலங்கை அரசு, தற்போது பாதுகாப்புத் துறை செயலாளர் கோத்பாய ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கையின் மூலம்அந்த தகவலை ஒப்புக்கொண்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோதபாய ராஜபக்ஷ, மனிதாபிமான நடவடிக்கை : புள்ளிவிவர ஆய்வு என்ற தலைப்பில் நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அரசு எண்ணற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், அப்பாவி மக்களுக்கு ஆபத்தாக செயல்பட்டுக்கொண்டிருந்த ஒரு ஈவிரக்கமற்ற எதிரிக்கு எதிராக, பெரிய அளவில் நடந்த இந்தப் போரில், அப்பாவி மக்களின் உயிர்ப்பலியை தவிர்க்க வேண்டும் என்பது இயலாமல் போய்விட்டது என்று கூறியுள்ளார்.

போர் நடக்கும் பகுதியில் பாதுகாப்பு வலையங்களை ஏற்படுத்துவதன் மூலமும், துப்பாக்கிச்சூடு நடத்தப்படக் கூடாத பகுதிகளை உருவாக்குவதன் மூலமும் அப்பாவி மக்களின் உயிர்ப் பலியை தடுக்க வேண்டும் என்ற கொள்கையை நிறைவேற்ற இலங்கை அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. இதுதொடர்பாக அனைத்துப் படையினருக்கும் மீண்டும் மீண்டும் பயிற்சியும் உத்தரவுகளும் அளிக்கப்பட்டன என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கோதபாய ராஜபக்ஷ, இந்தப் போரில் பலியான உயிர்கள் எத்தனை என்பது குறித்து எந்த விவரத்தையும் குறிப்பிடவில்லை.

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூனால் அமைக்கப்பட்ட குழு அளித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் விதமாக இந்த அறிக்கையை வெளியிட்ட அவர், இராணுவ நடவடிக்கையில் 40 ஆயிரம் அப்பாவிகள் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை மறுத்தார். இந்த குற்றச்சாட்டு ஆதாரமில்லாத ஒன்று என அவர் கூறினார்.

போரின்போது இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் அரசுக்கு ஆதரவாக முன்னேறிக்கொண்டிருந்த நிலையில், புலிகளின் தலைமை தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களை தங்களது மனிதக் கேடயங்களாக பயன்படுத்திக் கொண்டது என்று தனது அறிக்கையில் கூறியுள்ள இலங்கைப் பாதுகாப்பு செயலாளர், தங்களது போராளிகளுக்கும் அப்பாவி மக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை மறைத்ததன் மூலமும், மக்களின் குடியிருப்புப் பகுதிகளை தங்களது இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன் படுத்தியதன் மூலமும் விடுதலைப் புலியினரே அந்த மக்களின் உயிர்களுக்கு பாதகமாக மாறினார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மகாவம்சத்தில் தமது பெயர்களைப் பொறிக்க போர்குறித்து நூல் வெளியிடும் மனநோயாளிகள்



கொழும்பில் உள்ள மன நோயாளிகள் போர் பற்றி நூல்களை வெளியீடு செய்து வருவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போர் வெற்றி தொடர்பில் தங்களது பெயர்களை மகாவம்சத்தில் பொறித்துக் கொள்வதில் இவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். போர் வெற்றிக்காக படையினரை வழி நடத்திய என்னை சிறையில் அடைத்து விட்டனர்.

போரில் முக்கிய பங்காற்றிய 20 க்கும் மேற்பட்ட ஜெனரல்கள் மற்றும் பிரிகேடியாகள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். யுத்த நீதிமன்றின் தீர்ப்பு தொடர்பான வழக்கு விசாரணைகளில் கலந்து கொண்டு திரும்பிய போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, யுத்த நீதிமன்றின் தீர்ப்பிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதே தவிர ஜனாதிபதிக்கு எதிராக அல்ல என சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. அறிக்கை தொடர்பான "போர்க்குற்றவாளி" நூல் வெளியீடு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இந்தியாவில் விற்பனைக்கு வந்துள்ளது. "போர்க் குற்றவாளி" என தலைப்பிடப்பட்ட இந்நூல் சென்னையிலுள்ள புத்தக வெளியீட்டு நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்டுள்ளது.

328 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில் 240 பக்கங்கள் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது அத்துடன் இவ் வறிக்கையை இலகுவாக புரிந்துகொள்வதற்காக மேலதிக விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

# இலங்கை யுத்தக்குற்றவாளி அமெரிக்காவில் கைதானார்



கனடாவில் யுத்த குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்த இலங்கை குத்துச்சண்டை வீரரான இளந்தரிதேவஹே குலத்துங்க அமெரிக்க மியாமி சிறைச்சாலையில் சிறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும் சர்வதேச ஊடகத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

அமெரிக்காவினுள் யுத்தகுற்றவாளிகள் ஊடுருவியிருக்கலாம் என கனேடிய எல்லைப் பாதுகாப்புச் சேவை முகவர் அமைப்பு அமெரிக்காவுக்கு அறிவுறுத்தியிருந்ததை அடுத்து, இளந்தரிதேவஹே என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை அவரை கனடாவிற்கு திருப்பி அனுப்பக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# 65 உள்ளூராட்சி மன்றங்களினதும் உத்தியோகபூர்வ கால எல்லை அறிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் தேர்தல் நடைபெற்ற 65 உள்ளூராட்சி மன்றங்களினதும் உத்தியோகபூர்வ கால எல்லை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்தது.


இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி நிஹால் ஜெயதிலக தெரிவித்தார்.

அதன் பிரகாரம் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ கால எல்லை 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளதாக செயலாளர் சுட்டிக்காட்டினார்.


இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் கடந்த 30 ஆம் திகதி விசேட வரத்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

இரண்டு கட்டங்களாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட 3959 உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை இம் மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக கலாநிதி நிஹால் ஜெயதிலக தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

32. 

1. ELEPHANT 2. ELEPANT 3. ELEEPHANT

33. 

1. EYEE 2. EYE 3. EYYE

34. 

1. FIVE 2. FIEV 3.FIWE

**பின்வரும் சொற்றொடரினை வாசித்து அதற்குப் பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.**

35. எமது நாட்டில் இன்றைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட புதிய தாள் காசு ரூபா.................... ஆகும்.

36. 'கோயில்' என்பதைக் குறிக்கும் வேறு ஒரு சொல்..............................................................................ஆகும்.

37. 'பூனை' என்பதன் பன்மை..............................................................................................ஆகும்.

38. அவன புததகததைத தூககினான எனபதில பயனிலை..............................................................................ஆகும.

**உணவுப் பொருட்களின் பெயர்கள் A பகுதியிலும் அவை பழுதடையாமல் பாதுகாக்கும் முறைகள் B பகுதியிலும் உள்ளன. அவற்றில் சரியானவற்றை அம்புக்குறி மூலம் தொடர்புபடுத்துக.**

| | பகுதி A (உணவுப் பொருள்) | பகுதி B (பாதுகாக்கும் முறை) |
|---|---|---|
| 39. | மீன்கள் | 1. உப்பு, புளியில் ஊறவிட்டு ஊறுகாய் ஆக்கல் |
| 40. | தேசிக்காய் | 2. வெய்யில் காயவைத்து கருவாடு ஆக்கல் |
| 41. | மாம்பழம் | 3. வெய்யில் காயவைத்து புழுக்கொடியல் ஆக்கல் |
| 42. | பனங்கிழங்கு | 4. காய்ச்சி போத்தலில் அடைத்து பழப்பாகு ஆக்கல |

**கீழ்வரும் வினாக்களில் இருசொற்கள் ஒத்தகருத்துடையவை. அவ்விரு சொற்களின் கீழ் கீறிடுக.**

43. ஆசி, வேண்டுகோள், கோரிக்கை, வெகுமதி

44. புஷ்பம், புனல், காசினி, அகிலம்

45. பழைமை, வேழம், சன்மானம், தொன்மை

**"நான் ஒரு கிளியானால்....." என்னும் தலைப்பில் 5 வாக்கியங்கள் எழுதுக.**

46. ..............................................................................................

47. ..............................................................................................

48. ..............................................................................................

49. ..............................................................................................

50. ..............................................................................................





தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

கல்வி முரசு

வெளியீடு 25

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



**கீழ்வரும் பாடலைப் படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக.**

"வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது,
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் குறைபடாது,
கள்ளர்க்கோ மிக அரிது, காவலோ மிக எளிது - கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்க, உலகெல்லாம் பொருள் தேடி உழல்வதேனோ?

01. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு
   1. கல்வியின் சிறப்பு 2. செல்வத்தின் சிறப்பு 3. வீரத்தின் சிறப்பு

02. "கள்ளர்க்கோ மிக அரிது" என்பதன் பொருள்
   1. களவெடுக்க முடியாது 2. கள்ளரிடம் இருக்காது 3. களவெடுப்பது சுலபம்

03. இப்பாடலுக்குப் பொருத்தமாக பின்வரும் எக்குறளைக் கூறலாம்?
   1. "அரம்போல கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்"
   2. "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து"
   3. "தோன்றிப் புகழோடு தோன்றுக, அன்றில் தோன்றாமை நன்று"

04. "கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாதது" என்பதன் பொருள்
   1. கொடுக்க கொடுக்க செல்வம் குறையாது
   2. கல்வியை யாருக்கு கற்றுவித்தாலும், கற்பவனின் கல்வி ஒருபோதும் குறையாது
   3. கல்வியை கற்பிப்பதால் கல்வியறிவு குறையும்

05. "உள்ளதே பொருளிருக்க" என்னும் கூற்றில் பொருளாக கருதப்படுவது எது?

..............................................................................................

**பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக் கொண்ட கூற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

06. ஆடுகள் மலைப் பகுதியை நோக்கிப் போகின்றன.
   1. குன்று, நிகழ்காலம் 2. மேடு, எதிர்ப்பு
   3. மண், சிரமம் 4. குன்று, இறப்பு

07. ஒரு சிங்கம படுத்திருப்பது போல இந்த மலை தெரிகிறதே.
   1. கரி, குன்று, நிகழ்வு 2. அரி, குன்று, இன்று
   3. அரி, மலை, எதிர் 4. அரி, குன்று, நிகழ்வு

**பின்வரும் தரவுகளை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக. கோயில் திருவிழா ஒன்றில் பலூன் வியாபாரி 5 நாட்கள் விற்பனை செய்த பலூன்களின் விபரம் வருமாறு-**

| பலூன்கள் | 1 ஆம் நாள் | 2 ஆம் நாள் | 3 ஆம் நாள் | 4 ஆம் நாள் | 5 ஆம் நாள் |
|---|---|---|---|---|---|
| பச்சை | 15 | 18 | 21 | 24 | 27 |
| சிவப்பு | 20 | 25 | 30 | 35 | 40 |
| மஞ்சள் | 17 | 21 | 25 | 29 | 33 |
| நீலம் | 36 | 31 | 26 | 21 | 16 |
| ஊதா | 02 | 00 | 07 | 06 | 04 |

08. மூன்றாம் நாள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்ட பலூனின் நிறம் யாது?

..........................................................................................

09. சிவப்பு பலூன் விற்பனை நாளுக்கு நாள் எத்தனையால் அதிகரித்துச் செல்கின்றது?

..........................................................................................


10. விற்பனையில் முதலில் ஆகக்கூடுதலாக விற்பனை செய்யப்பட்டு பின்பு நாளுக்கு நாள் குறைந்து செல்லக் காணப்படும் பலூன் யாது?

..........................................................................................

11. பலூன்களில் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட நாள் எது?

..........................................................................................

**அருகில் தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட துண்டுகளின் அளவினைக் காட்டும் பங்கினை பின்னத்தில் காட்டும் சரியான விடையின் கீழ் கீறிடுக.**




12. (1) 3/8 (2) 6/8 (3) 2/8 (4) 3/4

**கீழ்வரும் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள சொற்களின் தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லிற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிடுக.**

13. நிமிடம் : நேரம், கிராம் : (கிலோ, அளவு, நிறை)
14. 8:7, புதன் : (வியாழன், செவ்வாய், வெள்ளி)
15. DOG : GOD, TAE : (TEA, TAE, ETA)
16. TON : NOT NET: (TEN, ENT, TNE)

**(17 - 21) வரையான வினாக்களுக்கு விடை எழுத கீழ்வரும் தொடர்பை அவதானிக்குக.**




ரூபா 9.50 ரூபா 8.00 ரூபா 16.50 ரூபா 20.00

17. ஒரு எலுமிச்சம் பழத்தின் விலை என்ன?

..........................................................................................

18. ஒரு தக்காளிப் பழத்தின் விலை என்ன?

..........................................................................................

19. ரூபா 50.00 கொடுத்து 3 அன்னாசிப் பழங்கள் வாங்கும் ஒருவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

..........................................................................................

20. எலுமிச்சம் பழம், அன்னாசிப் பழம், தக்காளிப் பழம் ஆகியவற்றில் ஒவ்வொன்று வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

..........................................................................................

21. இரண்டு எலுமிச்சம் பழங்களும் 10 கிராம் முந்திரிகைப் பழங்களும் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

..........................................................................................

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

22. இன்றிலிருந்து நான்கு நாளையின் பின் வருவது புதன்கிழமை. இன்று என்ன கிழமை
    1. செவ்வாய் 2. வெள்ளி 3. ஞாயிறு 4. சனி
23. எனது வயது 12 என்னைவிட மூன்று வயது மூத்தவன் அண்ணா. மூன்று வருடங்களின் பின்னால் அண்ணாவின் வயது என்ன?
    1. 20 2. 18 3. 17 4. 21
24. ஒரு பையில் 50 கிலோகிராம் மரக்கறி இருந்தது. இதில் பூசணிக்காய் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளின் நிறை 27 கிலோகிராம் 250 கிராம் ஆகும். பூசணியின் மொத்த நிறை எவ்வளவு?
    1. 23 kg 750 g 2. 22 kg 250 g 3. 22 kg 750 g 4. 23 kg 250 g
25. கடல் நீரில் இருந்து கிடைப்பது
    1. மீன் 2. முத்து 3. உப்பு 4. சிப்பி
26. காலை 7 மணியளவில் ஒருவர் தனது நிழலை நோக்கியவாறு நடந்து சென்றார். இவர் நடக்கும் திசை
    1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மேற்கு

**பாடசாலை ஒன்றில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் 120 பக்கங்களைக் கொண்ட புத்தகங்களை வாசித்து முடிக்க 5 மாணவிகளுக்கு எடுத்த காலம் வருமாறு-**

| | |
|---|---|
| கமலா | - 1 மணி 30 நிமிடங்கள் |
| தேவிகா | - 1 மணி 20 நிமிடங்கள் |
| விமலா | - 1 மணி 3/4 மணித்தியாலங்கள் |
| ராதிகா | - 1 மணி 1/4 மணித்தியாலங்கள் |
| சுமணலதா | - 60 நிமிடங்கள் |

27. குறைந்த நேரத்தில் புத்தகத்தைப் படித்து முடித்த மாணவி யார்?

..........................................................................................

28. புத்தகத்தைப் படித்து முடிக்கக் கூடிய காலம் எடுத்த மாணவி யார்?

..........................................................................................

29. போட்டியில் வேகமாகப் படித்ததில் இரண்டாவது இடத்தைப் பெற்றது யார்?

..........................................................................................

30. புத்தகத்தைப் படித்து முடிப்பதற்குக் குறைந்த நேரத்திலிருந்து கூடிய நேரம் வரை எடுத்த மாணவிகளின் பெயர்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

..........................................................................................

**கீழ்வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்பட்டவைகளுக்குரிய ஆங்கிலப் பெயரைத் தரப்பட்ட விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

31.



1. TELEPHONE 2. TALEPHONE 3. TELEPONE


விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2011 - கல்விமுரசு

# பலூன்களால் சாதனை



343 வான் பலூன் காரர்கள் ஒரே வேளையில் பறந்து உலக சாதனையை முறியடித்துள்ளார்கள். இதற்கு ஏராள மான சூடான வாயுவும் பொறுமையும் தேவைப்பட்டது. 12 ஆவது லொரெய்ன் உலக வான் பலூன் விழா பிரான்சின் சம்ப்லி-பஸீர்ஸ் இல் இடம்பெற்றது.

இதற்கு முன்பு 326 பலூன்கள் பறந்ததே சாதனையாக இருந்தது. ஆனால் பிரான்சில் இடம்பெற்ற இந்த பலூன் விழா முன்னைய சாதனையை முறியடித்துள்ளது. இந்த நிகழ்வில் 14 நாடுகள் பங்குபற்றின. 343 பலூன்கள் ஒரேநேரத்தில் பறக்கும் காட்சி.

**கே**ரள மாநிலம் கொச்சி அருகே உள்ள மூவாற்றுப்புலா நகரின் பக்கம் உள்ள கடாடி கிராமத்தில் உள்ளவர் மத்தாயி என்கிற விவசாயி.

இவரது வீட்டில் உள்ள மாட்டு தொழுவத்தில் கோழிகளை வளர்த்து வருகிறார். கடந்த 27.07.2011 அன்று தொழுவத்தில் கோழி இட்ட முட்டையை எடுத்துப் பார்த்தார். வழககத்தைவிட அந்த முட்டை சிறியதாக இருந்தது. சந் தேகப்பட்டவர் அந்த முட்டையை உடைத்துப் பார்த்தார். உள்ளே வெள்ளைக் கரு இருந்தது.


# கோழிமுட்டைக்குள் பலாக்கொட்டை



ஆனால் மஞ்சள் கருவுக்கு பதிலாக ஒரு சிறிய பலாக்கொட்டை இருந்ததைப் பார்த்து அதிர்ச்சியானார். இந்த தகவல் அக்கம் பக்கம் தெரியவே, பலர் வந்து அதை நேரில் பார்த்த வண்ணம் இருக்கிறார்கள். இதுஒரு அசாதாரண சம்பவம் என்று அதியசத்துடன் சொல்லுகிறார்கள் அப்பகுதி மக்கள்.

# போதை ஏற்றும் உப்பு

ஆம்! எப்படி புகையிலையும், சிலவகை போதை மருந்துகளும் மனித மூளையின் செல்களை தூண்டி விட்டு தற்காலிகமாக துடிப்புடன் செயல்பட வைக்கின்றனவோ, அதையேதான் உப்பும் செய்கிறதாம். இப்படித்தான் கூறுகிறார்கள் இது குறித்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள். என்ன?, இந்த செய்தியே ஒரு சிட்டிகை உப்பு சாப்பிட்டதைப்போல் இருக்கிறதா? ஹஉயர் ரத்த அழுத்தம் அல்லது இதயக்கோளாறுகளுக்கு இலக்காகலாம் எனவே உப்பைக்குறைத்துக் கொள்ளுங்கள் என்ற டாக்டர்களின் அறிவுரைக்கும் செவி சாய்க்காது உப்பின் மீதுள்ள காதலைக் குறைக்காமல் இருப்பவர்கள் ஏராளம். மீன், எண்ணை




யில் பொரிக்கப்படுகிற நொறுக்குத்தீனி இவையெல்லாம் உப்பில்லாமல் போனால் எப்படி இருக்கும்? யாருமே விரும்பமாட்டார்கள்.

உப்பு தொடர்பான இருவேறு விதமான ஆராய்ச்சிகளை அமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் குழு மேற்கொண்டது. முதலில், சில எலிகளுக்கு குறைவாகவும், சிலவற்றுக்கு அதிகமாகவும் உப்புச் செலுத்தப்பட்டு அவற்றின் மூளை செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன. மற்றொரு முறையில், சில எலிகளுக்கு சில நாட்கள் வரை உப்பு எதுவும் தராமல் விட்டுவிட்டு பின்னர் உப்பைக்கொடுத்து, அவற்றின் மூளைச் செயல் பாடுகளைக்கவனித்தனர். ஹெராயின், கோகெய்ன் மற்றும் நிகோடின் போன்றவற்றுக்கு அடிமையானவர்களின் செயல்பாடுகள் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருந்தன, உப்புக்காக ஏங்கிப் போன எலிகளின் செயல்பாடுகள். உப்பின் அளவு குறையும் நிலையில், மூளையில் நிஷரான்களின் சேர்க்கை நடைபெறுகிறது. இந்த நிஷரான் சேர்க்கைதான் உப்பு உடனடியாக தேவை என்ற உணர்வை அல்லது ஒருவித வேட்கையை ஏற்படுத்துகிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். உப்பு கொடுக்கப்பட்டு அது ரத்தத்துடன் கலப்பதற்கு முன்பே, எலிகளிடம் முன்பிருந்த அசாதாரண நிலை முற்றிலுமாக மாறிப்போனது என்ற சுவாரசியமான உண்மையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், உப்பின் அளவைக் குறைத்த போது எலிகளுக்கு உணவின் மீதே நாட்டம் குறைந்து போனது.

உப்பின் சுவை குறித்த தகவல்களும், அது தேவை என்கின்ற எண்ணமும் மூளையில் ஆழப் பதிவாகியிருப்பதனாலேயே நாம் உப்புப்பண்டங்களை விரும்பிச் சாப்பிடுகிறோம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்

# ரெட் புல் குடிப்பவரா நீங்கள்? எச்சரிக்கை?







**ரெ**ட்புல், க்லவுட்9 போன்ற (ஆற்றல்) எனர்ஜி குளிர் பானங்களில் சேர்க்கப்படும் கெ.்.பைன் மூலப்பொருள், அளவுக்கு அதிகமாக சேர்க்கப்படுவதாக, இந்நிறுவனங்களுக்கு மத்திய சுகாதார மற்றும் சுற்றுப்புற மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுற்றுப்புற சுகாதார மையம் 16 வகையான இதுபோன்ற பானங்களைக் கடைகளில் வாங்கி சோதனை கூடங்களில் வைத்து சோதனை செய்ததில் ஒவ்வொரு பானங்களின் லேபில்களிலும் குறிபிட்டுள்ள, அதாவது அரசு நிர்ணயித்துள்ள அளவைக் காட்டிலும் கூடுதலாக கெ.்.பைன் என்ற மூலப்பொருளைச் சேர்த்துள்ளன என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. 'ஒருவர் பருகும் ரெட்புல் எனர்ஜி பானத்தில், ஒரு கப் கா.்.பி சாப்பிடுவதற்குச் சமமான அளவிலேயே, கெ.்.பைன் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்படுகிறது□ என்று, ரெட்புல் நிறுவனம் அறிவித்திருக்கிறது. மேலும் இதே வகையில்தான் சுமார் 160 நாடுகளில் உள்ள எங்களின் நிறுவனங்களில் இப்பானம் தயாரிக்கப்படுகிறது எனவும் ரெட்புல் நிறுவனம் கூறுகிறது. இதன் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், இது போன்ற பானங்கள் பருகுபவர்கள், அவர்களுடைய மனது உஷார் நிலையில் இருப்பதற்கும், அவர்களின் வேலையில் அதிக கவனம் செலுத்துவதற்கும் விளயாட்டுப்போட்டிகளில் சுறுசுறுபபாக இயங்குவதற்கும் உதவுகிறது. ஆனால் அதிகமான் கா.்.பின் பருகுவதால் கடுமையான உடல் நலம் பாதிப்பு ஏற்படலாம் எனவும் கூறுகின்றனர். உணவு கலப்பட தடுப்பு சட்டம் 1954 திருத்தம் 37-A (2)ன் படி, இது போன்ற குளிர் பானங்களில், 145(ppm) அளவுக்கு மேல் கெ.்.பைன் மூலப்பொருள் சேர்க்கக்கூடாது என, வரைமுறை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதை எதிர்த்து ரெட்புல் நிறுவனம், தாங்கள் தயாரிக்கும் பானத்தில் சுமார் 320(ppm) அளவில் கெ.்.பைன் சேர்க்க அனுமதிக்க வேண்டும் எனக்கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்துள்ளது. இதிலிருந்து குளிர்பான நிறுவனங்கள் இலாபக்கண்ணோட்டத்தில் மட்டுமே இயங்குன்றன எனவும் அவற்றுக்கு மக்களின் ஆரோக்கியத்தில் எவ்வித அக்கறையும் இல்லை என்பதும் தெளிவாகிறது. அவரவர் ஆரோக்கியத்தை அவரவர்தான் பேண வேண்டுமென்பது சரிதான். இதனைக் கருத்தில்கொண்டு, இத்தகைய எனர்ஜி பான நிறுவனங்களை முழுமையாக கண்காணிப்பு வட்டத்தினுள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்!

# எண்களைக் காண

**நா**ம் கணினியில் பல கட்டண மென்பொருட்களை நிறுவி இருப்போம். உதாரணமாக OS மைக்ரோசொப்ட் ஓபிஸ், போட்டோசொப் போன்ற மென்பொருட்களை நம்முடைய கணினியில் கட்டாயம் நிறுவி இருப்போம். அதை நிறுவும் பொழுது அதற்கான சீரியல் எண்களை கொடுத்து இன்ஸ்டால் செய்து இருப்போம். ஆனால் அந்த சீரியல் எண்களை இப்பொழுது நம்மால் பார்க்க முடியாது.

ஒருவேளை அந்த சீரியல் எண்களை நாம் குறித்து வைக்காமல் இருந்தால் கணினியில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் திரும்பவும் நிறுவ அந்த சீரியல் எண் மிகவும் அவசியம். இது போன்ற சூழ் நிலையில் நமக்கு உதவத்தான் இந்த சூப்பரான மென்பொருள் உள்ளது. இந்த மென்பொருளை டவுன்லோட் செய்து கொள்ளவும் இதை இன்ஸ்டால் செய்ய வேண்டியதில்லை நேரடியாக இயக்கலாம். அந்த மென்பொருளை Extract செய்து பின்னர் அதன் .exe பைலை ஓபன் செய்யுங்கள். அடுத்து Search என்ற பட்டனை க்ளிக் செய்யுங்கள். அடுத்து இன்னொரு விண்டோ ஓபன் ஆகும் அதில் Time counter ஓடி கொண்டிருக்கும்.

முடிந்ததும் ok என்ற பட்டன் வரும் அதை க்ளிக் செய்யவும். அவ்வளவு தான் உங்களுடைய கணினி ஸ்கேன் ஆகும். ஸ்கேன் ஆகி முடிந்ததும் உங்கள் கணினியில் நிறுவியுள்ள மென்பொருட்களின் சீரியல் எண்கள் தெரியும். இப்படி உங்களுக்கு கணினியில் இன்ஸ்டால் செய்துள்ள மென்பொருட்களின் சீரியல் எண்கள் வரும். உங்கள் கணினி மட்டுமல்லாது அலுவலகங்களில் உங்கள் கணினியோடு லோக்கல் நெட்வொர்க்கில் இணைந்துள்ள கணினியின் சீரியல் எண்களை பார்த்து கொள்ளலாம். அதற்க்கு local host என்ற இடத்தில க்ளிக் செய்தால் உங்கள் கணினியோடு இணைந்துள்ள மற்ற கணினியின் சீரியல் எண்களையும் அவர்களின் அனுமதியின்றி பார்த்து கொள்ளலாம். HKEY_LOCAL_MACHINE என்ற இடத்தில் மாற்றம் செய்தும் மற்ற கணினிகளின் சீரியல் எண்களை பார்த்து கொள்ளலாம். உங்களுடைய நண்பர்களின் கணினிகளில் நிறுவியும் அந்த சீரியல் எண்களை குறித்து வைத்தும் நீங்களும் பயன்படுத்தி கொள்ளலாம்.

இந்த அனைத்து வசதிகளையும் இலவசமாக நமக்கு வழங்குகிறது இந்த மென்பொருள். மென்பொருளை டவுன்லோட் செய்ய - Licence Crawler1.6.0.182

கணினி மூலை

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு ஓய்வூதியம் வழங்க ஜெயலலிதா உத்தரவு




(சென்னை)

இலங்கையில் இருந்து வந்து தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியுள்ளவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் செயற்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும், முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தமிழக முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவின்மூலம் அகதிகள் முகாம்களில் வசிக்கும் 5544 இலங்கைத் தமிழர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியமாகப் பெறுவார்கள் என்று அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முகாம்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் நிவாரண அட்டைகளுக்கு இந்த மாதம் முதல் நிவாரணமாக அனைத்துப் பொருட்களையும் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இவர்களுக்கு நிவாரணக் கடைகளில் விற்பனையாகாத பொருட்களிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு ஒரு நிவாரண அட்டைக்கு 20 கிலோ அரிசி இலவசமாகவும், அதற்கு மேல் தேவைப்படுவோர் கிலோ 47 ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ளலாம். பருப்பு வகைகள், கோதுமை மாவு, மரக்கறி எண்ணெய், மண்ணெண்ணெய் உட்பட அனைத்துப் பொருட்களும் இந்த மாதம் முதல் வழங்கப்படுகிறது. அகதிகள் முகாமுக்குத் தேவையான அளவு தனி ஒதுக்கீடு செய்துள்ளதால், அவர்களுக்குப் பிரச்சினை இல்லாமல் பொருட்கள் கிடைக்க, அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.



**இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளராக நியமிக்கப்பட்ட ரஞ்சன் மத்தாய் (நடுவில்) பொறுப்பேற்றுக் கொள்வதற்காக புதுடில்லியில் நாடாளுமன்றப் பகுதிக்கு வருகை தருவதைக் காணலாம்.**

## இந்தியச் செய்திகள்

### பாலுக்கு பற்றாக்குறை

உலகிலேயே அதிகளவில் பால் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.

ஆனால், தேவை அதிகரிப்பு காரணமாகவும், அதிக பால் கொடுக்கும் பசுக்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும் பால் உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. இந்திய கால்நடை சபை சார்பில் சமீபத்தில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு முடிவுகள் குறித்து சபையின் தலைவர் நாராயணன் மெகந்தி கூறியதாவது, இந்தியாவில் ஆண்டுக்கு 35 இலட்சம் தொன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் பாலின் தேவை 60 இலட்சம் தொன்னாக உயர்ந்துள்ளது. நாட்டில் உள்ள பசுக்களிடம் பால் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாகவுள்ளது.

கால்நடைகளுக்கு தரமான உணவு கிடைப்பதில்லை. சரியான நேரத்தில் பராமரிப்பும், சிகிச்சைகளும் அளிக்கப்படுவதில்லை. பால் உற்பத்தியை பெருக்க நீண்ட காலத்திட்டம் எதுவும் கிடையாது. இன்னும் 2 ஆண்டுகளில் கால்நடைகளின் நிலைமை மிகவும் பரிதாபமாக போய்விடும். இதனால் பால் பற்றாக்குறை ஏற்பட்டு, வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகும் எனத் தெரிவித்தார்.

# கைது செய்யப்பட்டிருப்பவர் எனது கணக்காளர் இல்லை

## ராசாத்தி கூகிறார்


(சென்னை)

திருச்சியில் நிலம் அபகரிப்பு புகாரில் கைது செய்யப்பட்ட ரமேஷ் தனது கணக்காளர் இல்லை என, முன்னாள் முதல்வர் கருணாநிதியின் துணைவியார் ராசாத்தி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிப்பில்,

திருச்சியில் பல குடும்பங்களிடம் நிலப்பறிப்பில் ஈடுபட்ட ரமேஷ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் என்னிடம் கணக்காளராகப் பணிபுரிந்தார் என்று செய்தி வெளிவந்துள்ளது. ரமேஷ் என்ற பெயரில் யாரும் என்னிடம் கணக்காளராகப் பணிபுரியவில்லை. நாளேடுகளில் வெளிவந்துள்ள செய்திக்கும், எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என, அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலமோசடி தொடர்பான புகாரையடுத்து தலைமறைவானார் நடிகர் வடிவேலு



(சென்னை)

நிலமோசடி புகாரில் வடிவேலுவிடம் விசாரணை நடத்த பொலிசார் அவரை தேடி வருகிறார்கள். ஆனால் நேற்றுமுன்தினமே அவர் தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது.

எனவே அவருக்கு நிலம் வாங்கிக் கொடுத்த சக நகைச்சுவை நடிகர் சிங்கமுத்துவிடம் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் பொலிஸார். நகைச்சுவை நடிகர் வடிவேலு மீது சென்னை புறநகர் பொலிஸ் ஆணையாளர் ராஜேஷ்தாசிடம் ஓய்வு பெற்ற வங்கி உதவி பொது மேலாளரான அசோக் நகரைச் சேர்ந்த பழனியப்பன் நில மோசடி புகார் அளித்துள்ளார்.

இந்தப் புகார் தொடர்பாக வடிவேலுவையும் அவர் மனைவி விசாலாட்சியையும் விசாரிக்க முடிவு செய்த பொலிஸ் அது தொடர்பான அழைப்பாணையை வழங்கச் சென்றபோது, வடிவேலு இல்லை. ஆனால் அவர் எங்கு இருக்கிறார் என்பதும் தெரியவில்லை. அவரது உறவினர்கள், உதவியாளர்கள் எவரும் எதுவும் சொல்ல மறுக்கிறார்களாம் வடிவேலுவின் தொலைபேசி செயற்படாமலுள்ளது.

இதைத் தொடர்ந்து இந்த நிலத்தை வடிவேலுவுக்கு வாங்கிக் கொடுத்த சிங்கமுத்துவிடமும் விசாரணை நடத்த பொலிஸார் முடிவு செய்துள்ளனர். அவரும் விசாரணைக்குவர சம்மதித்துள்ளார். இதுகுறித்து சிங்கமுத்து கூறுகையில், வடிவேலுவும் நானும் சண்டை இல்லாமல் ஒற்றுமையாக இருந்தபோது எனது மேற்பார்வையில் நிறைய நிலங்களை வாங்கினார். இப்படி வாங்கும் நிலங்களை நேரடியாக அவரது பெயரில் பத்திரப்பதிவு செய்யமாட்டார்.

வருமானவரி சிக்கல் வரும் என்பதால் என் பெயரிலும், வேண்டியவர்கள் பெயரிலும் பவர் வாங்கி வைத்துக் கொள்வார். பிறகு எங்களை அழைத்து அவர் குறிப்பிடும் நபர் பெயரில் பத்திரப்பதிவு செய்து கொள்வார். இது போல் வாங்கிய இடங்களில் இதுவும் ஒன்று. அதில் இப்படி வில்லங்கம் இருப்பது எனக்கு தெரியாது என்றார்.

இதற்கிடையே வடிவேலுவைத் தேடி அவரது மதுரை வீட்டுக்கும் பொலிஸார் விரைந்துள்ளனர.

# வெங்கையாநாயுடுவின் மடிக்கணினியை கீழே போட்டு உடைத்தார் எடியூரப்பா



வெங்கையா நாயுடு


(பெங்களூர்)

கர்நாடகாவில் காபந்து அரசின் முதல்வர் அந்தஸ்து கொடுகக்கப்பட்ட எடியூரப்பா தனது கோபத்தையெல்லாம் பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கையா நாயுடுவின் மீது காட்டியதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெங்கையா நாயுடுவின் மடிக் கணினியைப் பலவந்தமாக அவரிடம் இருந்து பறித்த எடியூரப்பா அதை கீழே போட்டு உடைத்துள்ளார்.


பா.ஜ.க. மேலிடப் பிரதிநிதிகள் தங்கியிருந்த லலித் அசோக் ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்தச் சம்பவம் நடந்ததாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் எடியூரப்பாவை எழும்பச் சொன்ன அமைச்சர் ஒருவரை கன்னத்தில் அறைந்துள்ளார். அவர் முன்பு எடியூரப்பாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்ததாகவும், பின்னர் எடியு, ரப்பாவை ஆதரிக்கும் கடிதத்தில் கையெழுத்திட மறுத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கோபத்தில் அவரை எடியூரப்பா அடித்துள்ளார். எனினும அவரின் பெயரை அக்கட்சியினர் வெளியிடவில்லை.



எடியூரப்பா

# இராமதாஸ் கைதாகி விடுதலை



(திண்டிவனம்)

திண்டிவனத்தில் சமச்சீர்கல்வி அமுல் படுத்தக்கோரி பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் தலைமையில் போராட்டம் நடந்தது.

இந்தப் போராட்டத்தில் 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதனையடுத்து இராமதாஸ் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

# இலங்கைத் தமிழர் நலனுக்காக நிதி சேகரிக்கவுள்ளது பா.ஜ.க.

(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்விற்காக பாரதிய ஜனதா நிதியுதவியை அளிக்கவுள்ளாக அக்கட்சியின் தமிழகத் துணைத் தலைவர் எச்.ராஜா கோவையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது-

இலங்கைத் தமிழர்களின் நலனில் மத்திய அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தவில்லை. இதனால் அங்குள்ளவர்கள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக ஆர்.எஸ்.எஸ். வருகிற 13 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை தமிழ்நாடு முழுவதும் நிதிதிரட்டுகிறது. இதற்குப் பாரதீய ஜனதா உதவும். இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து பாரதீய ஜனதா தலைவர் பொன்ராதாகிருஷ்ணன் தலைமையில் வருகிற 8 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் நடைபெறும் கடல்முற்றுகை போராட்டத்தில் கட்சியின் பெருந்திரளானவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்றார்.

# தமிழருக்காக போராடிய சங்கிலியன்

**யாழ்ப்பாணம், இது யாழில் ஒருவல்ல பாணனுக்கு பரிசாக கொடுக்கப்பட்டமை யால் யாழ்ப்பாணம் எனப்படுவதாயிற்று .**

யாழ்ப்பாண வரலாற்றுகளின் படி சிங்கை நகரில் இருந்து (தற்கால சங்கானை) யாழ்ப்பாண இராச தானியை நல்லூர் நகரி என்ற தலை நகராகக் கொண்டு முதல் இராஜதானியை நிறுவியவர் சிங்கை ஆரிய சக்கர வர்த்திகள். இதை யாவரும் அறிந் ததே, ஆனால் இவர்களின் இரா ஜாங்கம் எவ்வளவு நீண்டதாக உள் ளது என்பது யாவரும் அறியாதது இந்த இராசதானி எவ்வளவு தூரம் நீண்டு இருக்கும் என்று அளக்க முற பட்டால் அதன் தூரத்தை அளப் பதற்கு ஆரிய சக்கரவர்த்திகளின் பெயரில் உள்ள சக்கரவர்த்திகள் என்ற பட்டமே போதும் அவன் ஒரு வன் சக்கரவர்த்திகள் ஆகலாம்? அவன் தன்பெயரில் சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தை சேர்ப்பதற்கு எவ்வளவு தகுதிகள் தேவை ? இதை அறிந் தால் தமிழரின் சாம்ராஜ்யத்தின் தூரத்தை கண்முன்னே காணலாம். இலங்கை சரித்திரத்தில் தமிழ் மன் னன் ஆரியன் ஒருவனே சக்கர வர்த்திகள் என்ற அந்தஸ்து பெற்று இருப பதை சரித்திரத்தில்காணக்கூடியதாக உள்ளது . குறுநில மன்னன், சிற்றர சு வரிசெலுத்தும் அரசர், கப்பம் கட்டும் இராசாக்கள் போன்றவர் களை அடக்கி ஆள தகுதி உடை யவனே சக்கரவர்த்திகள் என்ற அந்தஸ்து பெற முடியும். பாரத தேசத்திலே பல்லவ சக்கரவர்த்திகள், சோழ சக்கரவர்த்திகள் பாண்டிய சக்கரவர்த்திகள் ,மொகலாய சக்கர வர்த்திகள் என்று நாம் சில சக்கர வர்த்திகளை வரலாற்றின் மூலம் அறிகின்றோம். அது போலவே தான் இந்த தமிழ் மன்னன் சிங்கை ஆரிய சக்கரவர்த்தியின் சாம்ராட்சியமும் பரந்து மிக பெரிதாகி இருந்தது என்பது தெள்ளத்தெளிவாகின்றது . ஆனால் அவனுடைய ஆட்சி எவ்வளவு நீண்டதாக இருந்தது என்று கூறமுடியாமல் இருக்கின்றது காரணம் யாழ்ப்பாண இராச்சியத் தில் அரச சாசனங்கள், செப்பேடு கள் ,குறிப்புக்கள், மெய்கீர்த்திகள், கல்வெட்டுக்கள் போன்ற பல வர லாற்று பதிவேடுகள் அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் உளளன. யாழ்ப்பண வைபவமாலை, கைலாய மாலை, வையாபாடல் போன்ற சிறு குறிப்புக்களை வைத்து யாழ்ப்பாண சாம்ராச்சியத்தை அழக்க முடியாமல் போனாலும் இந்த சக்கர வர்த்திகள் அந்தஸ்து பெற்ற ஆரிய னின் சாம்ராச்சியத்தை அவன் பெயர் கொண்டே அறியலாம் . அடுத்ததாக யாழ்ப்பாணத்தில் நடைமுறையில்உள்ள தேச வழமை சட்டம்,சரித்திர ஆராட்சியாளர்கள் கணிப்பின்படி குறைந்தது 500 வருடங்களின் மேல் தொடர்ச்சியாக இடைவிடாத மிகப்பெரியதொரு சமுதாயம் பின்பற்றி ஒழுகி வந்த வழியே ஒரு சக்தியாக மாறிய பின்னர் அரசாங்கத்தால் அங்கீகாரம் பெறும்போது அது தேச வழமை சட்டமாகிறது இது போன்று யாழ்ப் பாணத்தின் பாரம்பரியமாக தமிழ் சமுதாயத்தினர் பின்பற்றி ஒழுகிவந்த வளி ஒரு பெரிய சக்தியாக மாறி பின் டச்சுக்காரரினால் தேசவழமை சட்டம் என்று வலுப்பெற்று பின் இலங்கை பாராளுமன்றத்தினால் ஏற்று இன்று தேச வழமை சட் டத்தை பயன்படுத்தி வருகின்றனர் . யாழ்ப்பாணத்து மக்கள் இவைகளை வைத்து பார்க்கும் போது தமிழர்க ளின் சாம்ராச்சியமும் பாரம்பரியமும் எவ்வளவு நீண்டு ,பரந்து, விரிந்து உள்ளது என்பதை அறியமுடிகிறது .

இந்த ஆரியன் வம்சம் மிகச் சிறந்த சிவபக்தன். பல்லவ சக்கர வர்த்திகள் வம்சமும் இதேபோன்று சிவபக்தர்கள் . இவர்களால் கட்டப் படும் கோவில்களுக்கு கைலாச நாதர் என்று பெயர் . இவர்களுடைய அரச இலச்சினை நந்தி இவர்களு டைய அரச கொடியும் நந்தி. ஆகவே தான் யாழ்ப்பாண கொடி இன்றும் நந்திக்கொடியாக உள்ளது. பின்னர் வந்த ஆரிய வம்சத்தவர்க ளால் ஆளப்பட்ட இந்த மிகப்பரந்த சாம்ராஜ்யம் கடைசிக்காலத்தில் ஒடுங்கி வந்தது. ஒடுங்கிய காலத் திலே ஆண்ட மன்னன் தான் பரராச சேகரன். இவனின் மனைவிமார்க ளில் பட்டத்து இராணி என்று அந்தஸ்து பெறாதவள் வயிற்றில் பிறந்தவன் தான் இந்த சங்கிலியன். இவன் முறைப்படி அரியாசனம் ஏறாமல் அரியாசனத்தை கைப்பற்றி தமிழ்மண்ணை ஆண்டான். இக் காலத்திலே தான் போத்துக்கீசர் கோட்டையை கைப்பற்றி தங்கள் அரசை இலங்கை பூராகவும் கைப்பற்றி கொண்டு வந்தனர் யாழ்ப்பாணத்தையும் அவர்கள் இலகு வாக பிடித்துவிடலாம் என்று எண்ணி வந்த போது தமிழர்களின் வீரத்தி னால் அவர்களுக்கு பின்னடைவு ஏற்பட்டு பின்னர் சங்கிலியனோடு சமாதானம் செய்து வியாபார நோக் கில் யாழ்ப்பாணத்தினுள் புகுந்தனர் .தற்சமயம் டச்சுக்கோட்டை உள்ள இடத்தில் சிறு கோட்டையை கட்டி அங்கு சங்கிலியனுக்கு எதிராக போர் ஆயத்தங்கள் செய்தனர் . இதை அறிந்த சங்கிலியன் அவர்க



ளோடு போரிட்டு சுமார் 3500 போத் துக்கீச போர் வீரர்களை கொன்று போரில் வெற்றி பெற்றான் . இவனை போரில் வெல்ல முடியாத போத்துக் கீசர் காக்கை வன்னியனின் தந்து ரோபாய உதவியோடு சங்கிலியனை கைது செய்து போத்துக்கீசரின் நீதி மன்றத்தில் நிறுத்தி சங்கிலியன் மீது மூன்று மிகப்பெரிய குற்றங்கள் சுமத் தினர். அவனுக்கு மரண தண்ட னையும் விதித்தனர். அதேசமயத்தில் மக்கள் மத்தியில் எதிர்ப்புக்கள் பல கிளம்பியபடியால் அவனை கோவா றிற்கு அனுப்பி சிறை வைத்தனர் . அவனை அங்கு தூக்கில் இட்டார் களா அல்லது சிறையிலேயே அவன் இறந்தானா என்பதில் சிறு ஐயம் உள்ளது . ஆனால் அவனு டைய சமாதி கோவாவில் உள்ளது . சங்கிலியன் மனைவி சங்கிலி தேவி நாச்சிமார் கோவில் அருகில் உள்ள கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்தாள் . (அரசனின் மனைவி யாரை நாச்சியார் என்று அழைப்பது உண்டு. அதனால் தான் அவ்விடத் துக்கு நாச்சியார் என்று பெயர் வந்து பின்னர் நாச்சிமார் என்று மருவி உள்ளது) வரலாற்றுப்படி சங்கிலி தேவி தீக்குளித்ததாக கூறப்படுகிறது . அத்தோடு இல் லாமல் சங்கிலி குமாரனை கிறீஸ் தவனாக்கி கோவாவிற்கு கொண்டு போய் விட்டார்கள் போத்துக்கீசர் . எங்ஙனமாயினும் சங்கிலியன் சந்ததி நிர்மூலமாக்கப்பட்டது என்பது உண்மையே யாழ்ப்பாண இராச தானியில் தமிழர்களுக்காக போரா டிய கடைசி தமிழன் என்று சொல்லக் கூடிய ஒருவனான சங்கிலியன் சிலை அவன் போத்துக்கீசருடன் போராடிய இடத்திற்கு அருகில் சிலையாக இன்றும் இருக்கின்றான். ஆனால் கால நிலைகளின் கார ணமாக அவன் சிதிலம் அடைந்து விட்டான் இப்பேர்ப்பட்ட யாழ்ப்பண இராஜதானியின் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களும் யாழ்ப் பாண இராஜதானியின் முதன்மை கோவிலாக விளங்கிய ஸ்ரீகைலாசநாதர் கோவிலின் குரு பரம்பரையில் வந்தவர்களினது பெரும் முயற்சியினாலும் பலதரப்பட்ட எதிர்ப்புக்களின் மத்தியில் பாரத தேசத்து சிற்பக்கலைஞரான புருஷோத்தமன் ஸ்தபதியினால் புனருத்தாரணம் செய்து இன்று கௌரவ அமைச்சர் டக்ளஸ் தோவானந்தா அவர்களினால் திரைநீக்கம் செய்து தமிழருக்காக போராடிய சங்கிலியனை என்றும் நினைவு கூர மக்களின் பார்வையின் மத்தியில் நிலைத்திருக்கப்படுகிறது.

## அமெரிக்க கடன் உச்ச வரம்பு பிரேரணை பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றம்

அமெரிக்காவின் கடன் உச்சவரம்பு தொடர்பான பிரேரணை அந்த நாட்டின் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது. கடன் உச்ச வரம்பு தொடர்பாக ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகளுக்கு இடையில் இறுதி தருணத் தில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 269 உறுப்பினர்களும், எதிராக 161 உறுப் பினர்களும் வாக்களித்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிட்டுள் ளன.

எனினும் இந்த பிரேரணை காங்கிரஸ் சின் மேல் சபை, செனட் சபை மற்றும் ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே இது சட்டமாக உருவாக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடன் உச்ச வரம்பை இரண்டு தசம் 4 ரில்லியனால் அதி கரிப்பது குறித்த இந்த பிரேரணையின் வாக்கெடுப்பு செனட் சபையில் அமெரக்க நேரப்படி இன்று மதியம் நடைபெற வுள்ளது.

இந்த பிரேரணை சட்டமாக்கப்பட வேண்டுமாயின் 100 ஆசனங்களை கொண்ட செனட் சபையில் 60 வாக்கு கள் கிடைக்க வேண்டுமென செனட் சபையின் ஜனநாயக கட்சி தலைவர் ஹரி ரீட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்த 10 வருடங் களுக்குள் 2 தசம் மூன்று ரில்லியன் வரவு செலவு திட்ட சேமிப்பு அமெரிக்கா வில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

ஜனநாயக கட்சியின் கட்டுப்பாட்டி லுள்ள செனட் சபையில் இந்த பிரே ரணை பெரும்பாலும் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சமூக செயற்றிட்டங்கள், சலுகைகள், வயோதிபர்கள் மற்றும் வருமானம் குறைந் தவர்களுக்கான சுகாதார கவ னிப்புக்கள் இந்த பிரேரணை மூலம் நிறுத்தப்படுவதால் சில ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு வெளி யிட்டுள்ளனர்.

## பி.பி.சி. செய்தியாளர் படுகொலை விசாரணையை ஆரம்பித்தது நேட்டோ

ஆப்கானிஸ்தானில் பி பி சி செய் தியாளர் கொல்லப்பட்டமை குறித்து நேட்டோ தலைமையிலான படையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.

தென் மாநிலத்தில் கடந்த வராம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக் குதல்கள் மற்றும் ஆயுத மோதல்களில் 12 சிறுவர்கள் உட்பட கொல்லப்பட்ட 19 பேரில் குறித்த செய்தியாளருடம் அடங்கியிருந்தார்.

எனினும் பி.பி.சி செயதியாளர் ஆயுததாரிகளால் கொல்லப்படடதாக இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேட்டோ படையினர் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை தமது செய்தியாளர் கொல்லப்பட்டமை குறிதது விசாரணை நடத்த வேண்டுமென பி.பி.சி கோரி யுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரான்ஸிலுள்ள கடாபியின் சொத்து கிளர்ச்சியாளர்களுக்குச் சென்றது

(பாரிஸ்)

பிரான்சில் முடக்கப்பட்ட கடாபியின் சொத்துகளை லிபிய போராட்டக்காரர்க ளுக்கு அளிப்பதாக பிரான்ஸ் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதன்படி 25.90 கோடி டொலர் கடாபி நிதியை பிரான்ஸ் அளித்தது. லிபிய போராட்டக்காரர்களின் தேசிய மாற்ற சபை இந்த நிதியை உணவு, மருந்து பொருட்கள் என மனிதநேய பணிக ளுக்கு பயன்படுத்தும்.

தேசிய மாற்ற சபையின் பிரான்சுக் கான புதிய தூதுவர் மன்சூர் சயப் அல் - நசீப் பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் அலய்ன் ஜீபேவை சந்தித்தார். இந்த சந்திப்புக்கு பின்னர் மன்சூர் கூறுகையில், கடாபியின் நிதி லிபிய மக்களுக்கு உரியது. இந்த நிதி உணவு, மருந்துகள் வாங்க பயன்படும் என்றார்.

கடந்த வியாழக்கிழமை லிபியா போராட்ட இயக்கம் பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளுக்கு தனது தூதுவர்களை நிய மனம் செய்தது. லிபியாவில் கடாபிக்கு எதிராக போராடும் நேட்டோ படையில் பிரான்ஸ், பிரிட்டன் துருப்பினர் உள்ள னர். லிபியா போராட்டக் சபையை முதலில் அங்கீகரித்த நாடு பிரான்ஸ் ஆகும்.

# பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு

(நேற்றைய தொடர்ச்சி...)

திரு.பா.சின்னையா புளவரவோடை வதிரி கரவெட்டி 721670619 V, திரு.நா. ராமேஸ்வரன் இல 355 சுழிபுரம் மத்தி சுழிபுரம் 800292786V, திரு.லோ.கி. ஆனந்த் உயரப்புலம், ஆனைக் கோட்டை 781760463V, யோ.நிமலன் செருக்கப்புலவு கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் 810862246V, திரு.இ.சஞ்சீவ் இராஜசெல்வம் அல்வாய் வடக்கு அல்வாய் 822044395V, பா.மயூரன் 57, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம். 800613728V, கு.பால முரளி சாஸ்திரியார் ஒழுங்கை தும் பளை பருத்தித்துறை 830732241V, ப. தபோதினி சிவகிரி இல்லம் அரசடிச் சந்தி நவாலி வடக்கு மானிப்பாய் 835460509V, வை தர்சினி இராஜபவனம் அம்பலவானர் ஒழுங்கை உடுவில் கிழக்கு சுன்னாகம் 847182334 V, வ.யோகநாதன் 327, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் 793540507 V.

***நேர்முகப் பரீட்சை நேரம் 1.00 pm***

அ.சா.துளயா 157, ஆடியபாதம் வீதி கேணியடி திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம் 778223007 V, திரு.க. கமலபாபு பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், விரி புகையிரத வீதி, வவுனியா 771061575V, இ.றமணி வவுனினில் அல்வாய் மேற்கு அல்வாய் 846103724V, க.துஸ்யந்தினி வீரகத்தி பிள்ளையார் கோவிலடி, இமையாள் மேற்கு, உடுப்பிட்டி 786173841 V, சி.சிறிராகுலன் லதிவாசா, மீசாலை வடக்கு, மீசாலை. 821821495V, திரு.ப.காண்டீபன் மூன்றாம் கட்டை பருத்தித்துறை வீதி கட்டைப்பிராய் யாழ்ப்பாணம் 782860488V, பே.நிவேதிகா இல. 24, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் 865682719V, க.துளசி நீர்வேலி மத்தி, நீர்வேலி, யாழ்ப்பாணம். 818254806V, ம.சுதாகர் சித்ராயா, நாலாம் குறுக்குத்தெரு, பருததித்துறை, யாழ்ப்பாணம். 830510648V, இ.மதன் இல59/2, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் 791532612V, தி.இராகினி கருப்பைக் குறிச்சி மேற்கு, வரணி. 807784668V, இ.செந்தில் இராணி மகால் பெரிய விலான், இளவாலை, யாழ்ப்பாணம். 831790130V, கு.துஸ்யந்தி நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி கொக்குவில் 706091688V, கு.சத்திய குமார் சாஸ்திரியார் ஒழுங்கை, தும் பளை பருத்தித்துறை 782380737V, செ.செந்தூரன் 41/1 பிரம்படி ஒழுங்கை, 763381242V, அ.சிவஞான சேகரன்

அரசடி ஒழுங்கை, நாவாலி தெற்கு, மானிப்பாய் 820564227V, வராகி குரும்பைக்கட்டி புலோலி 855041561V, இ நவரூபன் செருக்கம் புலம் தெல்லிப்பளை 803512175V, ப.தர்ம குமாரன் நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 750590500V, சி.அகிலன் தோதவாளை கரணவாய் கரவெட்டி 771240690V, கி.கணபதிப்பிள்ளை கயட்டை ஆவரங் கால், கிழக்கு புத்தூர். 661190248V, சி.தீபக் வடலியடைப்பு, பண்டைத்தரிப்பு. 825742174V, .ந சயந்தன் ஆலடி சந்தி, அராலி தெற்கு, வடடுக்கோட்டை 780622547V, ச.கோகுலதாசன் டச்சு வீதி, மானிப்பாய் 833442937V, திரு.கோ.அன்ரோஜீகன் 596, நாவலர் வீதி, அரியாலை யாழ்ப்பாணம் 801704441V, க.பாதுசா சி.வி.பிலிப் இல 9 பாத்திமா வீதி, திருகோணமலை. 836972384V, ப.சேயோன் இல18/3 மயிலணி ஒழுங்கை சுன்னாகம் யாழ்ப்பாணம். 760620505V, 88 தெ.இதயதாரணி பொன் கந்தையா ஒழுங்கை, நெல்லியடி, கரவெட்டி. 847914050V, தெ.தேவசியானி C/ o எஸ். கிருஸ்தபிள்ளை பூதவராயர் கோவில், வீதி பருத்தித்துறை. 867161376V, தி.கஜேந்திரன் பிள்ளையார் கோவிலடி, மாதகல், யாழ்ப்பாணம். 801012264 V, ச.நி.கமலராஜன் இல. 23 ஈச்சமோட்டை வீதி யாழ்ப்பாணம் 776700789V, திரு.அ.லி.ரயனிகாந் வடக்கு வீதி மிருசுவில் 781443719V, ர.பகீரதி சாரையடி புலோலி தெற்கு, புலொலி. 848572390V, அ.சுரேஸ்காந் மந்துவில் கிழக்கு, கொடிகாமம் 843532810V, ஞா.ஆதவன் அபிராமி மகால், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி 861493458V, ஐ.சுயெஸ்கா 10 கனகரத்தினம் மகாவித்தியாலய ஒழுங்கை, கச்சேரி, யாழ்ப்பாணம் 808481502V, ம. குமுதினி வளர்பிறை, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 816900964V, இ.கந்த சாமி பெரியதை அகம் இடைக்குறிச்சி வரணி 802581335V, சி.சுஜீவா 28, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி யாழ்பபாணம் 798323520V, த.பிரதீபன் உப் பு.ரணி வீதி, பெரியமடு, சாவகச்சேரி 770181542V, இ.இரகுபாலன் அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 793282176V.

***வவுனியா மாவட்டம்***

து.ஜெயந்தன் 23, மகாரம்பைக்குளம், பூந்தோட்டம், வவுனியா 810142294V, சி.சுரேந்திரகுமார் மே/பா. ஏஸ்.சிவராஜா, 2 ஆம் கட்டை, மன்னார் வீதி, நெலுக்குளம், வவுனியா 842741270V, சி.மோகனச்செல்வன் 3, சென் அன்டனி வீதி, பாசையூர், யாழ்ப்பாணம் 840221687V, வ.தயாபரன் 206. 3 ஆம் கட்டை, உக்கிளாங்குளம், வவுனியா 803344132V, ச.ஜீவசாந்தினி சுந்தரபுரம். அலகு 1, சாஸ்திரிக்குளம், வவுனியா 857853660 V, அ.தவீஷன் 43/3, சிவன் கோயில் வீதி, தோணிக்கல், வவுனியா 823312920V, கீ.சசித்ரா 60, கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா 816771927V, ம.குகபாலினி 71, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா 835553280V, உ.நிரோஷினி 142, குட்செட் வீதி, வவுனியா. 787993710V, ப.சத்தியசீலன் 157/1, குடியிருப்பு வீதி, பூந்தோட்டம், வவுனியா 710120471V, .ம.ஜெயப்பிரகாஷ் 73, பிரதான வீதி, கூமான்குளம், வவுனியா 801755160V, கி.கயல்விழி 171, 7 ஆம் ஒழுங்கை, தெற்கிலுப்பைக் குளம், வவுனியா 836503627V, சி.சுகிர்தன் ஆசிக்குளம், வவுனியா 873092653V, ஐ.பாஷானா 28/6, 2ஆம் ஒழுங்கை, பட்டாணிச்சூர், வவுனியா 855892804V, சி.சத்தியகீர்த்தி 109/4, 3ம் ஒழுங்கை, பூந்தோட்டம், வவுனியா 770283671V, அ.காயத்திரி108, யாழ்வீதி, வவுனியா 796181397V, மு.சதீஸ் 27, குடியிருப்பு, வவுனியா 783502143V, தி.சிவகரன் 78/7, மரக்கரம்பளை வீதி, நெலுக்குளம், வவுனியா 772994494V.

***கிளிநொச்சி மாவட்டம்***

***நேர்முகப் பரீட்சை நேரம் 4.00 pm***

பு.நாதன் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி 753432434V, க.சந்திரகுமார் 7/1, திருவையாறு, கிளிநொச்சி 803152268V, த.கஜேந்திரன் 301, அலகு 5, இராமநாதபுரம், கிளிநொச்சி 790403410V, செ.சதீசன் ஏகாம்பரவாசா- ஏகாம்பரம் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை 782960571V, பா.வசந்தன் 24, கரப்பன் காடு, வவுனியா 79066209IX, ச.சுகந்தினி கருக்காய்த்தீவு, பூநகரி 828050907V, திரு.ப.கோபிகிருஷ்னா 758, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி 791941741 V, க.தட்சனாஜினி 9V, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் 847951699 V, யோ.சோமசுந்தரம் 45/7, காரைக்காடு, 2ஆம் ஒழுங்கை, சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம் 811691674V.

அ.சத்தியன் சிவகுரு ஒழுங்கை, ஏழாலை மத்தி, ஏழாலை830014497V, ர.சர்மிளா 463, 10ம் அலகு, தர்மபுரம், பரந்தன், கிளிநொச்சி 816094631V, க.பிரபாகரன் 67/3, திருவையாறு, கிளிநொச்சி 821761425V, தி.பாலச்சந்திரன் 387/26, பிரமானந்தனாறு, தருமபுரம், கிளிநொச்சி 812554298V, வ.ரஞ்சன் 97/3, லக்ஷ பான்ட் வீதி, தோணிக்கல், வவுனியா 821894336V, சி.சிவராஜ், NEHRP, கச்சேரி, முல்லைத்தீவு 772001258V, ந.கார்த்திகா மானடித்தகுளம், கண்டாவளை, பரந்தன் 827442437V, பொ.சிவகுமார் 15/1இ கடற்கரை வீதி, கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் 741803445V, ச.சிவத்தில கன் கருக்காய்த்தீவு, பூநகரி 851983864V, க.சசிகுமார் 230, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி 853302104V, ச.பார்த்தீபன் 66/2, திருவையாறு, கிளிநொச்சி 840572510V, அ.வாசுகி பிரதேச செயலகம், கச்சேரி, கிளிநொச்சி 807231227V, பி.லிசோதா 94, 1ம் அலகு, முரசுமோட்டை, கிளிநொச்சி 845402868V,அ.தமிழரசி மே/பா எஸ்.சதீஸ் குமார், கட்டடங்கள் திணைக்கள விடுதி, கண்டி வீதி, 847911476V, இ.உதயசெல்வி 17/26B, பாரதி வீதி, திருகோணமலை 796205032V, ப.பர்மிளா 398, ஆறுமுகம் வீதி, வட்டக்கசசி, கிளிநொச்சி 855232898V, சி.சுபேநதிரன் 225, புதிய புன்னை நீராவி, விஸ்வமடுக்குளம் 783473623 V, த.சர்மிளா 32 D/10 உருத்திரபுரம், கிளிநொச்சி 817844464V, ஆ.பங்கயற் செல்வி பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம் 737232697V, ச.ரமேஸ்குமார் மே/பா தேவநேசன், சங்குவேலி வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம் 812725246V, இ.ரமேஷ் 31ம் கட்டை, முளங்காவில், பூநகரி, கிளிநொச்சி 831593555V, ப.சுஜீவன் சில்வா வீதி, வட்டகச்சி, கிளிநொச்சி 741061813V, க.கடம்பசோதி 64, கனகபுரம், கிளி நொச்சி 822412467V, சு.வசந்த ரூபி 129, D10 உருத்திரபுரம், கிளிநொச்சி 817141412V, நி.வனஜா மாகாண சுகாதார சேவைகள் பணிபபாளர் பணிமனை, வட மாகாணம் 835644294V, த.சந்திரிக்கா உசன், மிருசுவில் 836712943V, ம.தமிழினி 15/3, 8ம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியா 817571158V, பி.வினோதினி 49, வலயக் கல்விப் பணிமனை ஒழுங்கை, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி 828093975V, கோ.அன்புராஜ், 29, ஜெனித்தா இல்லம், அம்மன் கோயில் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா 761140655V, வி.தக்சிலாநிதி புளொரிடாமைத்திரி, வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி 805930063V, ஜெ.புஸ்பாவதி 313/56, 10ம் ஒழுங்கை, கோயில் புதுக்குளம், வவுனியா 815321278V, ச.ஜெனிதா விவசாய அமைச்சு, புறூடி வீதி, அரியாலை 808521806V, இ.துஷிந தன் இல 05/01 , திருவையாறு, கிளி நொச்சி 803500827V, உ.றாதிகா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை, கிளிநொச்சி 805242752V, நி.யசோதா மே/பா சுந்தர லிங்கம், சன்னதி வீதி, பதமேனி, அசசுவேலி 796081937V, கோ.பாலவேணி

84, பெரியகுளம், கண்டாவளை, கிளிநொச்சி 845563667V, கோ.நிரஞ்சனன் மே./பா இ.குமுதினி, வவுனியா செக்கட்டிப்புலவு GTM பாடசாலை, பம்பைமடு, வவுனியா 782724088V, ப.பார்த்தீபன் 115/10, ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியா 783212226V, த.சிறிரூபன் 74/58, சிங்கள ஏஜிஏ ஒழுங்கை, மன்னார் வீதி, வவுனியா 773135010V, கி.கௌசிகா. 413, கொரவபொத்தானை வீதி, ரம்மைக் குளம், வவுனியா 826622261V, வி.சுவெநதினி மே.பா எஸ்.ஆறுமுகம், ராகவாசா, 161, ஆடியபாதம் வீதி, தீருநெல்வேலி 817651208V, சு.சங்கீதா 413, கொரவ பொத்தானை வீதி, ரம்மைக்குளம், வவுனியா 808311992V, கு.அகிலன் 276, சிவா வீதி, வட்டக்கச்சி 762801663V, ப.ஜெசூரன் 203, சேவை வீதி, கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி 772891334V, சு.சுகந்தன் உப தபாற் கந்தோர், நல்லூர், பூநகரி, கிளிநொச்சி 812124366V, செ.சந்திரேஸ்வரி 454, திருநகர் கிளிநொச்சி 767830971V, ய.சுவர்ணா பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை 827403598V, அ.ஜேசுதாசன் கறுப்பு வீதி. சங்கானை 857782763V, பா.தேவரதன் கருக்காய்த்தீவு, பூநகரி, கிளிநொச்சி 862930576V, பி.சுகந்தினி பிரதேச செயலகம், கச்சேரி, கிளிநொச்சி 795805141V, சி.உதயரேகா மே/பா. ஏஸ்.இணுவில் வீதி, மானிப்பாய் 836583205V, வி.வசந்தன் 18, குஞ்சுக்குளம், வன்னினேரிக் குளம், கிளிநொச்சி 812645650V, ந.பிரசாந்தன் 49, லயன்ஸ் ஒழுங்கை, சுண்டிகுளி, யாழ்ப்பாணம் 833664000V, சி.அரியதாசன் வைத்தியசாலை வீதி, மாவடி வேம்பு 1, வந்தாறு மூலை, மட்டக்களப்பு 792734189V, ச.காந்திமதி 524/32இ பிரமந்தனாறு, தருமபுரம், பரந்தன் 806963453V.

பி.உதயவிஜயகுமாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி 775920483V, க.கஜேந்தினி 227, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளி நொச்சி 746232748V, க.மயூரதன் 589, 6ம் அலகு, ராமநாதன்புரம், கிளிநொச்சி 771334199V, த.ரஜனிகாந்த் தபால் கந்தோருக்கு அருகாமை, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி 791125006V, தி.ஏரின் களரிஸ்ரா பிரதேச செயலகம், கரைச்சி, கிளிசொச்சி 778373980V, நீ.சசிக்குமார் கிராஞ்சி, சிவபுரம், பூநகரி 803514852V, வி.சாரூபன் 49/21, 1ம் ஒழுங்கை, கோயில் வீதி, குரமன்காடு, வவுனியா 822823017V, கோ.ஜிநோதினி கண்டி வீதி, கரந்தை, பளை 828604959V, கு.குலேந்திரராஜா அத்தை, பூநகரி, கிளிநொச்சி 810092661V, உ.யோகராசா பிரதேச செயலகம், சாவகச்சேரி 781224960V, சோ.சுகந்தினி 192, உனியன் குளம், கோணாவில், கிளிநொச்சி 838494005V, நா.சோமசுந்தரராஜன் 192, உனியன்குளம், கோணாவில், கிளிநொச்சி 790016696V, ஜெ.சதூஜா கணேசா மில், 8ம் வட்டாரம், ஆத்தி மோட்டை, சாம்பல்தீவு 795442561V, கை.துஷ்யந்தன் கரைச்சி வடக்கு, MPCS, தலைமைக் காரியாலயம், பரந்தன் 823434430V.

# கல்வி சாரா ஊழியர்களுக்கு சம்பள நிலுவை வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுகளில் 50 சத வீதத்தை பெற்றுக்கொடுப்பதற்கான அமைச்சரவை பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக உயர்கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் சிலருக்கு இடையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது உயர்கல்வியமைச்சர் இவ்வாறான பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்.

புதிய வேதனக் கொடுப்பனவு முறையில் இருக்கின்ற முரண்பாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையை ஆராய்ந்து துரிதமாக பரிந்துரையை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வேதனங்கள் மற்றும் கணக்கீட்டு ஆணைக்குழு தலைவருக்கு, உயர்கல்வியமைச்சரினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓசோன் படையில் சேதம் விழிப்புணர்வுப் போட்டிகள்

'வளிமண்டலத்தில் ஓசோன் படை' தொடர்பான போட்டி நிகழ்வொன்று துணுக்காய் வலய பாடசாலை மாணவர்களிடையே இன்று நடைபெறவுள்ளது.

துணுக்காய் வலய கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப் போட்டி நிகழ்வில் உயர்தர மாணவர்களுக்கிடையே சித்திரம், பேச்சு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

## செய்தித்தாள்களில்...

நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

2010 ஆண்டின் வாக்காளர் பதிவின் அடிப்படையில் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 இல் இருந்து 6 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டுமுதலே வாக்காளர் பதிவு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இதற்கு முன்னரும் வாக்காளர் பதிவின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொகை குறைக்கப்பட்டமையை மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த விடயம் தொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் செய்திதாள்களில் கருத்தை வெளியிடாமல் தம்முடன் நேரடியாக தொடர்புகொண்டு விளக்கங்களை பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார்.

## வருடாந்த உற்சவம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்களுக்கு உற்சவங்கள் நடைபெறவிருக்கின்றது.

## பொறியியல் பீடத்துக்கு....

பொறியியலாளர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களுடனான விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இச்சந்திப்பின் போதே யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் அமைச்சரிடம் இக்கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த இரு கற்கைபீடங்களையும் அமைப்பதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புக்களும் தன்னால் வழங்கப்படும் என்று அமைச்சர் இச்சந்திப்பின்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாணவர்களினதும் சமூகத்தினதும் வளமான எதிர்காலத்தை கருத்திற்கொண்டு நாம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம். அந்தவகையில் தான் யாழ்.பல்கலைக் கழக மூதவையினரும் மற்றும் பேரவையினரும் என்னிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கிளிநொச்சியில் பொறியியல் மற்றும் விவசாயபீடங்களை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியிருந்தேன்.

இந்நிலையில் குறிப்பிட்ட இரண்டு பீடங்களையும் கிளிநொச்சியில் அமைப்பதற்கு ஜனாதிபதி ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அதற்கு தாம் ஜனாதிபதி அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் சுட்டிக்காட்டியதுடன், இவையெல்லாம் தமது அரசியல் அனுபவங்கள் ஊடாகத்தான் பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

முக்கியமாக கிளிநொச்சியில் குறிப்பிட்ட பீடங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பகுதியிலிருந்து படைத்தரப்பு விலகிக் கொள்ளப்படுவதான செய்தியானது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தார்.

## இந்திய மீனவர் சடலமாக மீட்பு

மன்னார் கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் காணப்பட்ட சடலம் ஒன்றினை மன்னார் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். இந்தச் சடலம் இந்திய மீனவரது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க மீனவர் ஒருவருடைய சடலமே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பகுப்பாய்வு...

தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளர் பிரையன் அடம்ஸ் கூறியுள்ளார்.

மோதலின்போதான அரசாங்கத்தின் குற்றங்கள் தொடர்பாக குவியும் சாட்சியங்களை மூடி மறைப்பதற்கான பளபளப்பான புதிய முயற்சி இது என அவர் கூறியுள்ளார்.

## செல்வம், சுரேஷின்....

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் இலங்கை நாடாளுமன்றக் குழுவில் ஒருவராகச் சென்று அ.தி.மு.கவினரின் எதிர்ப்பைப் பெற்றிருப்பது தமிழக மக்கள் மத்தியில் வேதனையினைத் தோற்றுவித்திருக்கின்றது. செல்வம் அடைக்கலநாதனின் இந்தியப் பயணம் தேவைதானா? என்று எமது செய்தியாளரிடம் கேள்வி எழுப்பினார் தமிழக சட்டத்தரணி ஒருவர்.

"இலங்கை அரசு யுத்தத்தை வெற்றிகொண்ட மமதையில் இருக்கிறதே தவிர, தமிழ் மக்களின் மனங்களை வென்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்த்ர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அது தயாரில்லை" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த சனியன்று சென்னை பெரியார் திடலில் இடம்பெற்ற இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மகாநாட்டில் கலந்து கொண்டு தெரிவித்திருந்தார். ஒரு மணி நேரம் இடம்பெற்ற உரை முழுமையிலும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களே தெரிவிக்கப்பட்டிருந்தன. இந்த உரை இடம்பெற்று இரண்டு நாட்களில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக கூட்டமைப்பின் மற்றொரு முக்கியஸ்தர் செல்வம் அடைக்கலநாதன் இந்தியா சென்றிருக்கின்றார்.

இந்திய நாடாளுமன்றில் போர்க்குற்றவாளிகளுக்கு வரவேற்பா? என்று தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டபோது அந்தக் கூச்சல் செல்வம் அடைக்கலநாதனுக்கும் எதிரானதாகவே அமைந்திருந்தது. ஈழத்தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு தம்மால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை தமிழக மக்களின் மனங்களில் வேதனையினைத் தோற்றுவித்திருந்ததாக அறியவருகின்றது.

கூட்டமைப்பின் இணைச் செயலர்களான செல்வம் அடைக்கலநாதனும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் வெவ்வேறு முகங்களை இந்தியாவில் வெளிப்படுத்தியிருப்பதற்கு உள்நோக்கம் உண்டா? அல்லது இதுவும் கூட்டமைப்பின் அரசியல் இராஜதந்திரமா? என்பது சாதாரண பொதுமக்களுக்கு புரியவில்லை. இதற்கான பதிலினை கூட்டமைப்பு வெளிப்படுத்தும் என்று நோக்கர்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர்.

## கிணற்றில்....

உறவினர்களுடன் சம்பவ இடத்தில் தேடிப் பார்த்த சமயம் அப்பகுதியில் இருந்த கிணறு ஒன்றில் வீழ்ந்து சிறுவன் இறந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்பின்னர் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா,எஸ்)

## வீதி விபத்தில்...

மோட்டார் சைக்கிளுடன் சம்பவ இடத்திலிருந்து லாவகமாக தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனையடுத்து குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த வயோதிபர் அவரது உறவினர்களினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் 10 நிமிடத்தின் பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)

# பனிக்கன்குளம் பாடசாலை வீதி சேதம்

(அம்பலப்பெருமாள்)

மாங்குளம் - பனிக்கன்குளம் பாடசாலை வீதி பலத்த சேதமடைந்துள்ளதால் மாணவர்கள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

பனிக்கன்குளம் காட்டுப் பகுதியில் மண் அகழும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால் பொதுமக்கள் இவ்வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதியூடாக கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக மண்ணேற்றிச் செல்வதாலேயே இவ்வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் எதிர்வரும் மழைக் காலத்தில் மாணவர்களும் மக்களும் இவ்வீதியூடாக செல்வதில் இடையூறுகள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மணல் அகழ்வு தொடர்பாக பனிக்கன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (121)

# பெண் திருடர்களின் துணிகரத் திருட்டு

(குருநகர்)

புனித யாகப்பர் தேவாலய 150 ஆவது ஜுபிலி விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட மக்களிடம் பத்துக்கும் மேற்பட்ட பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாகக் காலம் கடந்து செய்திகள் கசிந்துள்ளன.

கடந்த ஜுலை மாதம் 25 ஆம் திகதி குருநகரில் அமைந்துள்ள புனித யாகப்பர் தேவாலய ஜுபிலி விழாவில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நெருக்கடியினைப் பயன்படுத்தி பெண்களுடன் நெருக்கமாகக் கலந்திருந்த பெண் திருடர்களே இக்களவுகளில் ஈடுபட்டிருந்ததாக அறியப்படுகிறது.

ஒரு பெண்ணின் பத்தரைப் பவுண் தாலிக்கொடி உட்பட மேலும் ஒரு பெண்ணிடம் 2 பவுண் சங்கிலி என்பன அன்றைய தினம் களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# அதிகரிக்கும் பாலியல் துஷ்பிரயோகம் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதுடன், உடனடியாக இவற்றை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம், சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் மன்னார் மாவட்ட செயலகத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவரின் தலைமையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலர்களுக்கிடையில் மன்னாரில் இடம்பெற்று வரும் பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன் அடிப்படையில் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அறிவுறுத்தல் கூட்டம்


(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் கல்வி வலயம், வடமராட்சி கல்வி வலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான கூட்டம் நாளை மு.ப 9.00 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் தவறாது இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செய்திப்பாணம்

**பாராளுமன் றத்துத்தமிழ் படிநிலை குறைத்திடுமாம்**
**பேராளர் வடபகுதிப் பத்துப்பேரை - தாராளமாய்**
**வெட்டிக் குறைத்தாம் வெறுமனே ஆறாக்கிக்**
**கட்டிப்போடும் திட்டத்தைக் கடி!**



## மீண்டும் கடமையில்

(மருதனார்மடம்)

வடமாகாண கல்விப் பணிப் பாளராக ப.விக்னேஸ்வரன் கடந்த முதலாம் திகதி முதல் தமது கடமையை மீண்டும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.

இவர் மீண்டும் தனது கடமைப் பொறுப்புக்களை நேற்று முன்தினம் ஏற்றுக்கொண்டபின், நேற்று ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இக்கலந்துரையாடலில் வட மாகாணத்தைச் சேர்ந்த 12 வலயக் கல்விப் பணிப்பாளர்களும், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும், திட்டப்பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர். (06)

## எழுத்தாக்கப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச எழுத்தறிவுத் தினத்தினை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயம், பாடசாலை மாணவர்களிடையே எழுத்தாக்கப் போட்டியினை நடாத்தவுள்ளதாக, முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சிவசக்தி தெரிவித்தார்.


இப்போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களைத் தவறாது பங்கு பற்றச் செய்யுமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டியில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 08ஆம் திகதி நடை பெறவுள்ள சர்வதேச எழுத்தாளர் தின விழாவில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (06)

# இலங்கையை பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்தும்படி

# மன்மோகன் சிங்கிடம் வை.கோபாலசாமி மனு!



(புதுடெல்லி)

ஐக்கிய நாடுகள் மூலமாக இந்திய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவரது கூட்டாளிகளையும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கையளித்துள்ள மனுவில் தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, நேற்று பிற்பகல், பிரதமர் மன்மோகன் சிங்கை, இந்தியப் பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின் போதே வைகோ மனுவினை இந்தியப் பிரதமரிடம் கையளித்துள்ளார். அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என்னுடைய தொடர்ந்த வேண்டுகோள், ம.தி.மு.க.வின் தொடர்ந்த போராட்டங்களின் மூலமாக நாங்கள் வலியுறுத்தியதையும் மீறி இந்திய அரசு நிதி உதவி, ஆயுத உதவி மற்றும் இராணுவத் தொடர்புள்ள அனைத்துத் தளபாடங்களையும் இலங்கை அரசுக்கு வழங்கியது.

இதற்கு முன்னர் எழுதிய எண்ணற்ற கடிதங்களில், இந்திய அரசு இலங்கையில் நடைபெறுகின்ற இனப்படுகொலைக் குற்றத்திற்குப் பொறுப்பாளியாகிப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக நேரிடும் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

## விசேட மருத்துவ முகாம்

மக்கள் மீள்குடியேற்றப் பகுதிகளான வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்கான மருத்துவ முகாம் ஒன்று மக்கள் வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய நிகழ்வாக நடாத்தப்படவுள்ளதாக யாழ்.மக்கள் வங்கியின் பிராந்தியக் காரியாலய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இம்மாத நடுப்பகுதியில் இம் மருத்துவ முகாம் குறித்த பகுதிகளில் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார். குறித்த பகுதிகளில் காணப்படும் நீரிழிவு நோயாளர்கள் பயனடையக் கூடியதாக இம் மருத்துவ முகாம் அமையவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சம்பந்தமான விசேட வைத்திய அதிகாரிகள் முகாமில் சிகிச்சை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (எஸ்)

## விழிவெண்படலத்தில் சத்திர சிகிச்சை

விழிவெண்படல குறைபாடுடைய நோயாளர்களுக்கு இலவசமாக கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இச்சத்திர சிகிச்சை முகாமிற்கு நோயாளர்களைத் தெரிவு செய்யும் சிகிச்சை முகாம் எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் எதிர்வரும் 08ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறையிலும், 11.00 மணிமுதல் பிரதேச வைத்தியசாலை வேலணையிலும் இடம்பெறும். இச்சிகிச்சை முகாமில் கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் நோயாளர்களைத் தெரிவு செய்வார்கள். எனவே விழிவெண்படலக் குறைபாடுடைய நோயாளர்கள் இச்சிகிச்சை முகாமில் பங்கு பற்றித் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று யாழ். சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்து[illegible].

## பண்டாரவன்னியன் சிலை புனரமைக்க ஏற்பாடு

வவுனியா மாவட்ட செயலக வளவில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலை புனரமைக்கப்படவேண்டும் என வவுனியா நகரசபை எதிர்கட்சி தலைவர் சு.குமாரசாமி முன்வைத்த கோரிக்கை சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

சிலைக்கு வர்ணம் பூசி வளைவுகள் ஏற்படுத்தப்பட்டு மின்விளக்குகள் பொருத்தப்படவேண்டும் என எதிர்கட்சி தலைவர் முன் வைத்த கோரிக்கைக்கு இணங்க வேலைத்திட்டம் ஆரம்பித்துள்ளது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ரி.சிவசிதம்பரம் மற்றும் அன்றைய மாவட்ட சபை தலைவராக இருந்த சட்டத்தரணி எம்.சிற்றம்பலம் ஆகியோரின் முயற்சியினால் இந்தச்சிலை நிறுவப்பட்டது. [illegible])

## மாகாணக் கல்வி அமைச்சுக்கு உதவிச் செயலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வியமைச்சின் முஸ்லிம் விவகாரத்திற்கென சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக வடமாகாண கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எம்.எம்.சியான் குறித்த சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் இந்நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகவும், யாழ். வலயத்தில இயங்கிவரும் வடமாகாண கல்வியமைச்சின் அலுவலகத்தில் இவரது அலுவலகம் அமைந்துள்ளதாகவும் வடமாகாணக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நியமனத்தின் பிரகாரம் வடமாகாணத்தின் முஸ்லிம் பாடசாலைகள், முன்பள்ளிகள் மற் றும் ஆசிரிய நியமனங்கள் என்பன குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமெனத் தெரியவருகின்றது.

அத்துடன், வடமாகாணத்தில் குறித்த விடயங்கள் தொடர்பான தரவுகள் திரட்டப்படும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## நாடாளுமன்ற ஆசனம் குறைப்பு விளக்கம் கோருகிறது 'கபே'




(யாழ்ப்பாணம்)

2010ம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மாவட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவ விபர அறிக்கையானது தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனக்கூறி 'கபே' அமைப்பு தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தினை அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தேர்தல் ஆணையாளர் நாயகமான மஹிந்த தேசப்பிரியவுக்கு எழுதி அனுப்பி வைத்துள்ளார்.

மேலும் அவர் கடிதத்தில், அண்மைக் காலத்தில் ஊடகங்களில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தொடர்பில் தேர்தல் வருடாந்த வாக்காளர் விபர அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தெளிவற்ற செய்திகள் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து ஆணையாளர் நாயகம் விழிப்புணர்வாக இருப்பீர்கள் என நான் நம்புகிறேன்.

2009ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டின்படி யாழ் மாவட்டத்துக்கு 10 பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு தற்போது 2010ஆம் ஆண்டு பதிவேட்டின்படி அதனை ஆறாகக குறைத்திருப்பது பலர் மத்தியிலும் பல்வேறான குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பல்வேறு அரசியல் கட்சிகளும் பல்வேறு ஊடக அறிக்கைளை விடுத்திருந்தது. இவர்களின் ஊடக அறிக்கையின் அடிப்டையில் பிரதிநித்துவம் குறைப்புக்கான தெளிவான தகவல்கள் இல்லை என்பது 'கபே' அமைப்புக்கு தெட்டத் தெளிவாகிறது.

இந்நிலையில் பிரதிநிதித்துவ குறைப்பானது இனப்பிரச்சனை ரீதியில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியது என்பதால், கீழ் நாம் குறிப்பிடும் விடயங்கள் தொடர்பில் சட்டரீதியான தெளிவான விளக்கம் அளிக்கவும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

1. யாழ்ப்பாண மாவட்டத்தில 2010 வாக்காளர் பட்டியலுக்கு ஏற்ப ஆறு நாடாளுமன்ற ஆசன ஒதுக்கீடு.

2. யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் வாக்காளர் பதிவேட்டின் வேறுபாடுகள்.அத்துடன் வருடாந்த வாக்காளர் பதிவுகள் நடைமுறை மற்றும் மக்கள் விழிப்புணர்வு விடயங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.



வவுனியா அரச பண்ணையில் நடைபெற்று வரும் தேசிய விவசாயிகள் வாரத்தின் இரண்டாம் நாளான நேற்று கமத்தொழில் கண்காட்சித்திடலுக்கு விஜயம் செய்த நாளைய இளைஞர் அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ உள்ளூர் உணவு உற்பத்தி விற்பனை நிலையத்தையும் பார்வையிடுவதைக் காணலாம். (39)

## நல்லூர் மஹோற்சவ வீதித்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் வீதித்தடைகள், பாதை மாற்றம் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் தொடர்பான அறிவித்தல்கள் யாழ்.மாநகர சபை முதல்வரினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மேற்படி அறிவித்தல்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதில் அரசடிச் சந்திக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதியின் பகுதி, பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட கோயில் வீதியின் பகுதி, செட்டித்தெரு வீதியிலிருந்து பருத்தித்துறை வீதி வரையான செட்டித்தெருவின் பகுதி ஆகிய வீதிகளில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்லுதல் வேண்டும். பருத்தித்துறை வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதி வழியாக பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

முத்திரைச் சந்திப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியிலும், கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில், அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், வீரமாகாளி அம்மன் ஆலய வீதிகளிலும், செம்மணி வீதியிலும், பூங்காவிற்கு அப்பாலும் கோயில் வீதியிலும், சிவன் அம்மன் சந்திக்கு அப்பாலும் வாகனத் தரிப்பிடங்கள் அமையப்பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.